பூங்கோதை இயற்றிய

# அர்த்தநாரீசர் குறவஞ்சி

என்னும்

# திருச்செங்கோட்டுக் குறவஞ்சி



மகாமகோபாத்தியாய

டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

2002

# பூங்கோதை இயற்றிய

# அர்த்தநாரீசர் குறவஞ்சி

என்னும்

# திருச்செங்கோட்டுக் குறவஞ்சி


பதிப்பாசிரியர்கள்

**புலவர் பேராசிரியர் ம.வே. பசுபதி,** எம்.ஏ.,

**புலவர் ஞா. மேகலா,** எம்.ஏ.,

**எஸ். சாயிராமன்**



மகாமகோபாத்தியாய

டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

2, அருண்டேல் கடற்கரைச் சாலை,

பெசன்ட் நகர், சென்னை - 600 090.

**2002**

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண் : 142
வெளியீட்டு வரிசை எண் : 176

முதற்பதிப்பு 2002

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 600 090.

விலை ரூ.50/-

ஒளி அச்சு மற்றும் அச்சிட்டோர் :
ஸ்ரீ பிரிண்டர்ஸ்
63, கிழக்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டை,
சென்னை - 15. ✆ : 24350477, 9840192822

# பதிப்புரை

*கயிலை யங்கிரிச் சயில வெஞ்சிலைப்*
*புயல்செய் கண்டனைப் பயிலும் நெஞ்சமே*

**- 3 அர்த்தநாரீசர் குறவஞ்சி**

அர்த்தநாரீசர் குறவஞ்சி என்னும் இந்நூல் தமிழில் அச்சில் வெளிவராத ஓர் இலக்கியமாகும். டாக்டர் உ.வே.சா. அவர்கள் சேகரித்து வைத்துள்ள ஓலைச் சுவடிகளில் இருந்து படியெடுத்து, செப்பம் செய்து இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலின் ஆசிரியர் இன்னார் என்று சரிவரத் தெரியவில்லை என்றாலும் பல ஆதாரங்களைக் கொண்டு இந்நூலின் ஆசிரியர் பூங்கோதை என இப்பதிப்பால் வரையறுத்து அறிவிக்கப் பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும். தக்கதொரு பெண்பாற் புலவரின் இனிய படைப்பொன்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து காட்டுவது மனத்துக்கு நிறைவைத் தருகிறது.

சொல் நயமும், பொருள் நயமும், மிகுந்ததாக இவ்விலக்கியம் திகழ்கிறது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இந்நூல் உள்ளது. இடையிடையே குறத்தியும், மோகனாங்கியும் 27 இடங்களில் உரையாடுவது உரைநடையாக வருகிறது. அப்பகுதிகள் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பேச்சு வழக்கு வார்த்தைகளை நமக்கு இனங்காட்டுவனவாக உள்ளன.

டாக்டர் உ.வே.சா. நூல் நிலையத்தில் உள்ள 2,618 ஓலைச் சுவடித் தமிழ் நூல்களில் 475 நூல்கள் இன்னும் அச்சில் வராதவை என இனங்கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றாகிய இந்நூல் முதன் முதலாக அச்சில் வெளிவந்துள்ளது.

பூங்கோதையாரின் திருச் செங்கோட்டுக் குறவஞ்சி அச்சாகித் தமிழ் நெஞ்சங்களில் பவனிவரத் தொடங்கி உள்ளது. இவ்வம்மையாரின் கணவர் 'எம்பிரான்' எனப்படும் 'பத்தர் பாடி' இயற்றிய தக்கை இராமாயணம் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை வெளியீடாக வெளிவந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் பதிப்புப்பணி அதே பாணியில் இந்நூல் நிலையம் வாயிலாக, அவர் தம் திருமகனார் திரு. சா. கல்யாண சுந்தரம் ஐயர் அவர்களாலும், அவர்தம் பெயரனார் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்களாலும் தொடர்ந்த நிலைமை தற்பொழுது அவர்தம் கொள்ளுப் பெயரனார் திரு. சு. வேங்கட கிருஷ்ணன் அவர்களாலும் தொடர்வது மிக்க மகிழ்ச்சிக் குரியதாகும்.

டாக்டர் உ.வே.சா. நூல் நிலையத்தில் உள்ள, அச்சில் வெளிவராத தமிழ் நூல்கள் அனைத்தும் தமிழ் ஆர்வலர்களின் உதவியால் விரைவில் வெளிவந்து தமிழ் அன்னையின் அழகுக்கு மேலும் மெருகூட்டும் என நம்புகிறேன்.

*'கண்ணுதல் எந்தைஎம் மான்அரவக்*
*கங்கணன் நங்கை ஓர் பங்குடையான்*
*விண்ணுதலும் திருக்காட்டுப் பள்ளி*
*வேதியன்; வேதியர் நாதன்நம்பன்*
*பண்ணுதல் பாடல் அறாத தில்லைப்*
*பதியில் நடம்செய் பரமன்தாளை*
*எண்ணுதல் செய் அடியேனுக்கு என்றும்*
*இடர்இலை இடர்இலை இடர்இலையே'*

(டாக்டர் உ.வே.சா. அவர்கள் இயற்றியது)

**ம.வே. பசுபதி**
*காப்பாட்சியர்*

*மகாமகோபாத்யாய*
*டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம்*
*சென்னை - 600 090.*

# ஆராய்ச்சியாளர்களுக்கு ஓர் அறிமுகம்

**குறவஞ்சி இலக்கணம்:**

சந்தனம் மணக்கும் செந்தமிழ் மொழியில் தொண்ணூற்றாறு பிரபந்த வகைகள் உள்ளன. அவ்வகைகளுக் கெல்லாம் உரிய இலக்கணத்தைத் தெரிவிக்கும் நூல்களைப் பாட்டியல் நூல்கள் என்று கூறுவார்கள். அவற்றில் பன்னிருபாட்டியல் என்னும் இலக்கண நூல்

*"இறப்பு நிகழ்வு எதிர்வெனும்முக் காலமும்*
*திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே"* **(நூற்பா-53)**

என்று இலக்கணம் கூறுகிறது.

குறவஞ்சி என்று பெயரைக் குறிப்பிடாமல் விட்டாலும் கூட குறத்திப்பாட்டு என்பது குறவஞ்சியைக் குறிப்பது ஆகும். தொல்காப்பியத்திலும் இதற்கான குறிப்பு இருக்கிறது. (தொல் பொருள் நூற்பா-237)

கட்டுவிச்சி, அகவன் மகள் ஆவாள். தெய்வங்களை அகவுவதால் (அழைப்பதால்) அகவன் மகள் எனக் கட்டுவிச்சியைக் கூறுவர்.

*'அகவன் மகளேஅகவன் மகளே,*
*மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்*
*அகவன் மகளே, பாடுக பாட்டே,*
*இன்னும் பாடுக பாட்டே அவர்*
*நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே'*

**(குறுந்தொகை-23 ஆவது பாட்டு)**

என்ற பாடல் மிக்க சுவை பொருந்தியது ஆகும்.

கட்டுவிச்சியைப் பற்றிய பல்வேறு செய்திகள் நம் இலக்கியங்களில் உள்ளன. பெருங்கதை, ஐங்குறுநூறு, முத்தொள்ளாயிரம், நம்மாழ்வார் திருவாய்மொழி, முதலிய பகுதிகளில் கட்டுவிச்சி குறி சொல்லும் செய்திகள் உள்ளன.

**பெயர்க் காரணம் :-**

உலா நூல்களில் பெண்களையே மையப்படுத்திக் கவிதை சொல்லப்பட்டு இருக்கின்றது. அதுபோலக் குறவஞ்சி நூல்களிலும்

பெண்களை மையப்படுத்தியே கவிதை சொல்லப்பட்டு இருக்கிறது. குறவஞ்சி என்பதற்குக் குறத்திப் பெண் என்பது பொருள். வஞ்சி என்பது கொடி என்ற பொருளைத்தருகிறது. கொடி என்ற சொல் மென்மையான குணங்களைக் கொண்டு இருப்ப வர்களைக் குறிக்கும். மென்மையான குணம் உடையவர்களிடம் தெய்வத்தன்மை காணப்படும்.

குறம், குறவஞ்சி, குறவஞ்சி நாடகம் என்ற மூன்று பெயர்களில் இவ்வகை இலக்கியங்கள் உள்ளன. இம்மூன்று இலக்கியங் களிலுமே குறத்தி குறி சொல்வது விளக்கப்பட்டுள்ளது. சில குறவஞ்சி இலக்கியங்களில் வசனம் கலந்தும் காணப்படுகிறது.

**தமிழில் எழுந்த குறவஞ்சி நூல்கள் :-**

தமிழில் இதுவரை அச்சேறி உள்ள குறவஞ்சி நூல்கள் இருபத்து ஒன்று என்றும், மொத்தக் குறவஞ்சி நூல்கள் 103 என்றும், குறவஞ்சி நூல்கலளப் பற்றி ஆய்வு செய்த டாக்டர். முத்துசண்முகம், நிர்மலா மோகன் போன்றோர் தெரிவித்துள்ளனர். இவ்வாய்வு முடிவுக்கு நம் டாக்டர் உ.வே.சா நூலகமும் பயன்பட்டு உள்ளது.

பதினேழு, பதினெட்டு நூற்றாண்டுகளில் குறவஞ்சி இலக்கியங்கள் மக்கள் இலக்கியங்களாகப் பரவலாக எழுந்தன. பெரும்பாலும் தெய்வங்களைப் பற்றிய சிறப்புக்களைப் பாமர மக்களுக்கும் தெரிவிப்பதாகவே இதன் பயன்பாடு அமைந்துள்ளது. தெய்வத்தின் பெயரில், அமைந்த குறவஞ்சிகளில் அழகர் குறவஞ்சியும், கும்பேசர் குறவஞ்சியும், மக்கட் பெயரில் அமைந்த குறவஞ்சிகளில் சரபேந்திர பூபால குறவஞ்சியும், ஊர்ப் பெயர்களில் அமைந்த குறவஞ்சிகளில் குற்றாலக் குறவஞ்சியும், பெத்தலகேம் குறவஞ்சியும் தமிழ் இலக்கிய உலகில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

**குறவஞ்சி நாடக மாந்தர் :-**

பாட்டுடைத் தலைவர் பெயர் தெய்வப் பெயராகவோ, புரவலர் பெயர்களாகவோ அமையும். ஞானக் குறவஞ்சிக்கு மட்டும் எவ்வகைத் தலைவரும் இல்லை என்பதும், எவ்வகைக் கதைமாந்தரும் இல்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

பாட்டுடைத் தலைவியர் பாட்டுடைத் தலைவ்ரின் மனைவியாக - பெண் தெய்வமாக இருப்பது இல்லை. காரணம் குறவஞ்சி இலக்கியம் ஒரு வகையான அகப்பொருள் இலக்கியங்களே என்றாலும் கூட மையத்தில் அகப்பொருள் திறனில் ஒரு வேறுபாடு இருக்கிறது. அகப்பொருள்

இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவர் பெயர் வரும், களவித் தலைவரின் பெயர் வராது. குறவஞ்சி இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவனைக் களவித் தலைவி காமுறுவதாக உள்ளது. இந்நிலையில் பாட்டுடைத் தலைவன் பெயர் கூறப்பட்டு இருப்பதால் களவித் தலைவிக்கும் ஒரு பெயர் வரைந்து கூறவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனவே களவித் தலைவியையும், பாட்டுடைத் தலைவி என்றே பெயர் வகுத்துக் குறவஞ்சி இலக்கியங்கள் கூறுகின்றன. அப்பெயர்கள் கீழ்வருமாறு;

வசந்தவல்லி, மதனவல்லி, ஜகன் மோகினி, ராஜ மோகினி, மோகனவல்லி, அதி மோகினி, அதி மோகனவல்லி, சுந்தரவல்லி, மோகன ரேகை, கோமலை, தேவ மோகினி, காமவல்லி, மோகனாங்கி, தமிழரசி, அதிரூப மோகினி என்ற பெயர்கள் பாட்டுடைத் தலைவியாக விரும்பும் களவித் தலைவி பெயர்களாகும். குறவஞ்சி இலக்கியங்களில் இவ்வாறு வருகின்றன.

குறவன் பெயர் சிங்கன் என்றும், குளுவன் என்றும், குளுவசிங்கன் என்றும்வருகின்றன. குறத்திக்கு ஒரு பெயர் குறிப்பிடும் பழக்கம் குறவஞ்சி இலக்கியங்களில் இல்லை என்றாலும், பெத்தலகேம் குறவஞ்சியில் குறத்திக்கு விசுவாசம் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. குறவனுக்கு ஒரு கையாளாக ஒரு பாத்திரத்தை குறவஞ்சி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவனையும் குளுவன் என்றே குறவஞ்சி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சில இலக்கியங்கள் அக்கையாளினை நூவன் என்றும் சின்னான் என்றும் உளியன் என்றும், மூலன் என்றும் சின்னக் குளுவன் என்றும் குறிப்பிடுகின்றன.

**நாடக மாந்தரின் சில இயல்புகள் :-**

குறவஞ்சி நாடகத்துள் குறத்தியே மைய நாடகப் பாத்திரம் என்று கொள்வதில் தவறில்லை. குறத்தியின் குணங்கள் திறன்கள் வியக்கத் தக்கனவாகும். சங்க இலக்கியங்களிலுள்ளும் புறநானூற்றுப் பாடல் (11) பாடிய பேய் மகள் இளவெயினியும், நற்றிணைப் பாடல் (357) பாடிய குறமகள் குறவெயினியும் சிறந்த கற்பனை ஆற்றல் விளங்கியவர்களாகக் காணப்படுகின்றனர். புறநானூற்றுப் புலவர் பொருள்நசைஉள்ளம் பொருந்தியவர் என்பதை அவர் பாடலால் குறிப்பாக உணரலாம். நற்றிணைப் பாடல் 'நின் குறிப்பு எவனோ தோழி என்குறிப்பு என்னோடு நிலையாது' என்றதொடரின் உட்கோள் அப்புலவரின் குறி சொல்லும் ஆற்றலைக் குறிப்பதாகக் கொள்ளலாம். குறி கூறுவதில் வல்லவள் போலும் என இவரைப்பற்றி டாக்டர் உ.வே.சா. அவர்களும்

பாடலாசிரியர் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகளால் குறத்தியர்கள் திறன் மிக்கவர்கள் என்பதை உணரலாம். குறவஞ்சி நூல்களில் எல்லாம் குறத்தியர்கள் ஒப்பனை செய்து கொள்வதில் வல்லவர்களாகவும், இடன் அறிந்து பேசும் திறன் உள்ளவர்களாகவும் குறி சொல்லும் ஆற்றல் பெற்றவர்களாகவும் சன்மானம் பெறும் வேட்கை உள்ளவர்களாகவும் விளங்கினார்கள் என அறிய முடிகிறது.

குறவர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்களாகவும் அவசர புத்தி உள்ளவர்களாகவும், காதல் மனைவியையே ஐயப்படும் கீழ்மைக் குணம் கொண்டவர்களாகவும், மனைவி, தெளிவு செய்த பின் நம்பும் குணம் உள்ளவர்களாகவும், ஆடல், பாடல், வேட்கை உள்ளவர்களாகவும் இருந்தனர் என உணர முடிகிறது.

**திருச்செங்கோடு :-**

குன்றுதோறாடும் குமரப் பெருமானின் திருத்தலங்களில் கொங்கு நாட்டுத் திருச்செங்கோடு, தனிச் சிறப்புடையதாகும். உமையொரு பாகன் மலை மேல் தனிக்கோயில் கொண்ட ஊரும் இதுவேயாகும். தமிழ்நாட்டில், சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள மலைத்தலம் திருச்செங்கோடு. 'கொங்கேழ்' தலங்களில் திருச்செங்கோடும் ஒன்றாகும். இம்மலையின் பாறை செம்மை வண்ணம் கலந்துள்ளதால் இம்மலையைச் செங்கோடு என்றழைக்கின்றனர்.

பிற பெயர்கள், திருக்கொடிமாடச் செங்குன்றூர், கட் செவிக்குன்றம், பணிமலை, தந்திகிரி, நாகபூதரம், புசக பூதரம், நாகாசலம், நாகமலை, கோதையூர் என்பனவாகும்.

திருச்செங்கோட்டுக்கு 48 இலக்கியங்கள் உள்ளன. அதிக இலக்கியங்கள் பெற்ற ஒரே ஊர் இதுவே ஆகும்.

கண்ணகி திருச்செங்கோட்டில் தெய்வமானாள் என்ற ஒரு கருத்தை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்குச் சிலம்பில் பல ஆதாரங்கள் உள்ளன. அவற்றை விரிவாகக் கரந்தைப் புலவர் மு. கோவிந்தராசனார், ஈரோடு செ.இராசு அவர்களின் கட்டுரை களாலும் அறியலாம்.

**திருச்செங்கோட்டு அர்த்தநாரீசர் கோயில் :-**

திருச்செங்கோட்டில் மலையில் உள்ளது அர்த்தநாரீசர் திருக்கோயில். மூலத்தானத்திருவுருவம் சலவைக் கல்லால் ஆகியது. திருவடியில் நீரூற்று இருக்கிறது. வைகாசி மாதம் நடக்கும் தேர்த்திருவிழா அன்று அர்த்தநாரீசர் எழுந்தருளுவார். முருகன் சன்னதி பெரியது. அர்த்தநாரீசரிலேயே அம்பாளும் இருப்பினும் பாகம்பிரியாளம்பிகை எனத் தனியே அம்பாள் சன்னதியும் உள்ளது.

அம்பிகை தவம் இருந்து இறைவனின் இடப்பாகம் பெற்ற தலம் இது என்பர். சிதம்பரத்திலுள்ளது போல இத்தலத்திலும் பெருமாள் சன்னதி உள்ளது. பெருமாளின் திருநாமம் ஆதி கேசவப் பெருமாள் என்பதாகும். மலையடிவாரத்தில் ஆறுமுகசுவாமி திருக்கோயில் உள்ளது. மலையில் சுப்பிரமணிய சுவாமி சன்னதி உள்ளது.

**திருச்செங்கோட்டுத் தெய்வப் பனுவல்கள் :-**

திருச்செங்கோடு கொங்கு நாட்டுத் திருத்தலங்கள் ஏழில் ஒன்று. தேவாரம், பெரியபுராணம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, முதலான தெய்வ மணங்கமழும் பழம் பாடல்களும் இத்திருத்தலத்திற்குண்டு.

இத்திருத்தலம் பற்றிய நூல்கள் இரண்டாம் நூற்றாண்டு முதல் இன்றைய நாள்வரை பல்வேறு காலத்தைச் சார்ந்தவை. பல புலவர்களால் பாடப்பட்டவை. பண்ணொழுகும் பக்திச் சுவை மிகுந்தவை. பிறவிப் பெருங்கடலை நீந்தப் பெருந்துணையாக அமைந்தவை. இவை நெஞ்சையள்ளும், சொல் நயமும், பொருள் நயமும் உடையவை. இவற்றில் சில இங்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளன.

**தேவாரம்** : சம்பந்தர் அருளிய முதல் திருமுறையில் 'வெந்த வெண்ணீறு' எனத் தொடங்கும் வியாழக்குறிஞ்சிப்பண் அமைந்த பதிகம் இத்திருத்தலம் பற்றியதாகும். அப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூர் என்ற செய்தி உள்ளது.

அர்த்தநாரீசர் என்பதே மெய்ப்பொருள் என்ற செய்தி ஓரிடத்திலும், அர்த்தநாரீசரைத் தொழுவார் அவலம் அறுப்பர் என்ற செய்தி ஒரு இடத்திலும், அர்த்தநாரீசரைத் தொழுவார் தடுமாற்றறுப்பர் என்ற செய்தி இரண்டு இடங்களிலும் அர்த்தநாரீசரைத் தொழுவார் வினைப் பற்று அறுப்பரே என்ற செய்தி ஐந்து இடங்களிலும், ஞானசம்பந்தப் பிள்ளையார் உரைப்பது கருதத்தக்கதாகும்.

திருக்கடைகாப்புச் செய்யுளுள்ளும் இப்பதிகப் பனுவல் ஒவ்வொன்றையும் நலமலி பாடல் என்றும், இப்பாடல்களைப் பலகாலும் பயின்று வல்லமை பெறுவர்களின் வினைத் தொடர் நீங்கும் என்றும் குறித்துள்ளமையால் ஓர் அருங்கருத்து விளங்கும்.

சைவ சமய குரவர்கள் இறைவியைத் தொழுது பதிகம் பாடினாரில்லை. அர்த்தநாரீசர் திருமேனி உமையொரு பாகனான திருமேனி. வினைப்பற்றற உமையொரு பாகன் வேண்டுமென்ற தனால் இப்பதிகம் அம்பிகை வழிபாட்டையும் வற்புறுத்தியதாகிறது. இவ்வகையில் இவ்வழிபாட்டினராகிய மூவர் பெருமக்கள் சிலை வழிபாட்டு உடன்பாட்டினர் எனல் தகும்.

அருணகிரிநாதரின் கந்தரலங்காரத்தில் எட்டுப் பாடல்களிலும் கந்தரனுபூதியில் ஒரு பாடலிலும், கந்தரந்தாதியில் ஆறு பாடல்களிலும் திருப்புகழில் இருபத்தொரு பாடல்களிலும் ஆகமொத்தம் அருணகிரிநாதரின் 36 பாடல்களிலும் திருச்செங்கோட்டைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**அர்த்தநாரீசர் குறவஞ்சியும் திருச்செங்கோட்டுக் குறவஞ்சியும் ஒன்றா வேறா:**

அர்த்தநாரீசர் குறவஞ்சி, திருச்செங்கோட்டுக் குறவஞ்சி ஒன்றா வேறா என்ற கேள்விக்குக் கொங்கு மண்டல சதகத்தில் விடை உள்ளது. திருசெங்கோட்டைப் பற்றிக் கூறும் கொங்கு மண்டல சதகம் என்ற நூலில் 49வது பாடலில் உதாரணப் பாடலாகக் கூறப்பட்டுள்ள 'பொன்னின் மழை பொழிந்தது எங்கள் நாடு' எனத் தொடங்கும் பாடல் அர்த்தநாரீசர் குறவஞ்சியில் 53வது பாடலாகக் கூறப்பட்டுள்ளது. எனவே அர்த்தநாரீசர் குறவஞ்சியும், திருச்செங்கோட்டுக் குறவஞ்சியும் ஒன்றே என்பது இதன் மூலமாகத் தெரிகிறது.

**ஆசிரியர் வரலாறு:-**

இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை என்றே இதுவரை கருதப்படுகிறது. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருச்செங்கோட்டில் எம்பெருமான் என்ற சிறந்த கவிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். நல்லதம்பிக் காங்கேயன் என்ற புரவலர் எம் பெருமானாரைக் கொண்டு தக்கை ராமாயணம் பாடுவித்தார். தக்கைராமாயணம் என்பது தக்கை இசையில் அமைந்த எளிய நடை உடைய ஓர் இராமாயண இலக்கியம் ஆகும். இந்நூலாசிரியரின் துணைவியார் பெயர் பூங்கோதை என்பது ஆகும்.

பூங்கோதை நல்ல சமத்காரம் வாய்க்கப் பெற்றவர் என்பதைக் கொங்கு மண்டல சதகச் செய்யுள் ஒன்றால் அறியலாம். பெண்கள் அறிவை இழித்துப் பேசிய புலவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் பூங்கோதையார் இயற்றிய பாடல் ஒன்றைக் கொங்குமண்டல சதகம் சுட்டிக் காட்டுகிறது. அப்பாடல் வருமாறு.

*அறிவில் இளைஞரே ஆண்மக்கள்; மாதர்*
*அறிவில் முதிர்ஞரே ஆவர் - அறிகரியோ*
*தான்கொண்ட சூலறிவர் தத்தையர்; ஆண்மக்கள்*
*தான் கொண்ட சூலறியார் தான்.*

என்பது அப்பாடல். கொங்கு மண்டல சதகம் இவ்வம்மையாரைப் பற்றிச் 'சிறிய இடைச்சி எம் பெருமான் மனைவி சிறந்து வளர் மறுவறு சங்ககிரி சேர்வது கொங்கு மண்டலமே' என்று கூறுகிறது. இவற்றால் பெரும் கவிஞராகிய எம்பெருமானின் துணைவியாகிய பூங்கோதையும் சிறந்த கவிஞர் என்பது புலனாகும். இப்பெண்பாற் புலவராகிய பூங்கோதை திருச்செங்கோட்டுக் குறவஞ்சி செய்தார் என்று ஏ.இ. சீரங்க முதலியாரின் தலவரலாற்றுச் சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருச்செங்கோட்டுக் குறவஞ்சியும், அர்த்த நாரீசர்குறவஞ்சியும் ஒரே நூல் தான் என்று இக்கட்டுரையின் முற்பகுதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் சிந்திக்கும் பொழுது அர்த்தநாரீசர் குறவஞ்சி எனப்பெறும் திருச்செங்கோட்டுக் குறவஞ்சியை இயற்றியவர் பூங்கோதை எனப் பெறும் பெண்பாற் புலவரே எனக் கொள்ளுதல் தகும்.

எம்பெருமான் என்னும் புலவரை ஆதரித்த வள்ளலாகிய நல்லதம்பிக் காங்கேயன் பற்றித் தக்கை ராமாயணத்தில் குறிப்புகள் உள்ளன. அது பாடுவித்தோன் என்ற முறையில் எம்பெருமான் தெரிவித்த செய்திகள் ஆகும்.

இந்த அர்த்தநாரீசர் குறவஞ்சியில் நல்லதம்பிக் காங்கேயன் பற்றிய ஒரு குறிப்பும் இல்லை. கணவரை ஆதரித்த புரவலனைப் பற்றிப் பெண்பாற்புலவராகிய பூங்கோதையார் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றே கருத வேண்டியுள்ளது.

பூங்கோதையார் மதுரையைச் சார்ந்தவர் என்பதும், பூங்கோதையாரும் எம்பெருமானாரும் இடையர்குலத்தவர் என்பதும் கொங்கு மண்டல சதகத்தின் உரையில் கூறப்பட்டுள்ள வரலாற்றால் அறிய முடிகிறது. அர்த்தநாரீசர் குறவஞ்சியில் சோலை மலை அழகரின்பால் தமக்குள்ள ஈடுபாட்டை

*"தார் கொண்ட துளபமொடு சீர்கொண்ட மணி மார்பில் தரிசோலை மலையழகர்"* (செய்யுள்-4)

*"சோலை அசலமால்"* (செய்யுள்-9)

*"ஆலினும் வேலை மாலிரும் சோலை மலையினும் பழகி நிலைபெறும் அழகர் அருளினால்"* (செய்யுள்-11)

*"மைத்துனர் ஆன சோலை மலையில்"* (செய்யுள்-12)

*"மால் அலங்காரத்திருச் சோலை மலையான் என்றும் மைத்துனர்"* (செய்யுள்-13)

*"மகிழ்ந்து தேவர் வழுத்தும்சோலை மலையில் விண்டு"* (செய்யுள்-25)

*"வளமைசேர் திருமலை அழகர் தினம் மகிழும்"* (செய்யுள்-35)

*"கருணை தரும் சோலை மலை"*

*"அலர்மகள் சேர் சோலை மலை அழகருக்கு"* (செய்யுள்-47)

*"மன்னும் திருமலை அழகர் மைத்துனர்"* (செய்யுள்-51)

*"திருமலை மால்அழகர் திருச்செழிக்கும் எங்கள் நாடு"* (செய்யுள்-53)

*"மெய்யமால் இருஞ் சோலை மலை"* (செய்யுள்-57)

*"யாக மகிழ்ந்து திருமலையில் அழகர் பதம் அன்பாகவே துதி செய்யடா சிங்கா"* (செய்யுள்-94)

என்னும் இடங்களில் புலப்படுத்தி உள்ளார்.

இவ்வகையில் மதுரையைப் பிறப்பிடமாகக் கொண்டவராகிய பூங்கோதையார் இந்நூலை இயற்றினார் எனக் கொள்ளும் கருத்து வலிமை உடையதாகிறது.

திருச்செங்கோட்டு அர்த்தநாரீசரைக் கோதை நாயகன் எனக் குறிப்பிடும் சமய இலக்கிய மரபு உண்டு. இவ்விலக்கியத்துள் அங்ஙனம் 31 இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் பெயர் கோதை என்றும், திருச்செங்கோட்டை, கோதையூர், கோதை நகர், தென் கோதை என்றும், சிவனைக் கோதை அண்ணல் என்றும்

குறிக்கப்பட்டுள்ளமை உணரத் தக்கதாகும். கிளவித் தலைவியைக் குறத்தி விளிக்கும் போது கோதை என்று விளிப்பதாக 73ஆம் பாடலில் வருகின்றது. இந் நூலாசிரியராகிய பூங்கோதை மோகனாங்கியாகத் தன்னை வரித்துக் கொண்டமை, குறத்தி கோதை என இவளை விளித்ததனால் உணரலாம்.

எவ்வாறு நோக்கினும் இவ்விலக்கியத்தின் மிகு நுண்ணிய இத்தனை அசைவுகள் ஒரு பெண்பாற் புலவரின் மெல்லியல்பிலிருந்து தோன்றியமையையே இசைக்கின்றன. இவரின் கணவருக்குப் 'பத்தர் பாடி' என்ற சிறப்புப் பெயருண்டு. இவ்வம்மையார் தாம் அப்பெயரில் மிக்க ஈடுபாடுடைமையை ஆறாம் செய்யுளில் சிவன்திரு நாமமாக இதுவரை வழங்கப் பெறாத 'பத்தர் பராதன்' என்பதைக் குறிப்பிட்டது தாம், கணவரைத் தெய்வமாகக் கருதியமையைக் குறிப்பித்தது எனலாம். பத்தர் பராதன என்பதற்கு அடியவரின் பரவுதலே செல்வமாக உடையவன் என்பது பொருளாகிறது.

செந்தமிழ்க் கவிஞர் போற்றும் சிறந்த செங்கோட்டில் (செய்-85) என்று, குறிப்பிட்டு ஒரு கவிஞரின் பெயரைச் சொல்லாமல் பொதுவகையாகக் குறித்தமையால் இத் தொடரால் இக்கவிஞர் தம் கணவராகிய பத்தர்பாடியைக் குறிப்பிட்டதாகக் கொள்ளலாம்.

*தேசம்உள கவிராசர் புகழ்விசு*
*வாசர் அடியவர் நேசராம்*
*பூசை நெறி கொள்மகேசர் பணிகிரி*
*வாசர் அர்த்த நாரீசர் நாட்டினில்*

என்ற பாடற்பகுதி தம் கணவராகிய பத்தர் பாடி எனப்படும் எம்பெருமானைக் குறித்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. பிறிதொரு கவிஞரை இத்தொடர் குறித்ததெனின் கவிஞர் பெயர் குறிப்பிடப் பெற்றிருக்கும். இப்பகுதியில் தம் கணவர் நாட்டிலுள்ள கவிஞர்களுக்கெல்லாம் அரசர் என்றும் அடியவர்களின் நேசர் என்றும் புகழ் உள்ளவர் என்றும் சிவபூசையை நெறிப்படச் செய்பவர் என்றும் குறித்துள்ளார். தக்கை ராமாயணம் செய்த எம்பெருமான் தக்க கவிதாயினியை மணங்கொண்டதால் பெரும்புகழ் பெற்றார் என்பது உண்மை. கவிஞரும், கவிதாயினியுமாகக் கூடி வாழும் நல் இலக்கிய வாழ்வு கோடியில் ஒருவருக்கே கிடைக்கும் போலும்.

**சிவபெருமான்:-**

அர்த்தநாரீசர் குறவஞ்சியில் சிவனுடைய திருப்பெயர்களை நிறையப் பெய்துள்ளமை நினைந்து இன்புறுவதற்கு உரியதாகும்.

புயல் செய் கண்டன் (நீலகண்டன்) (செ-3) நித்திய கல்யாணர், பரமித்திரர், மகேசன், தேவி உமை பாகர், (செ-4) ஜெயதுங்கன், சங்கரன், நிசங்கன், மங்களாகாரன், பொங்குஅராதரன், ஜெயகரன், புயங்கன், கொங்குவளநாடன், வளங்கன், ஆதி நடராசர், நாகபூஷணர், சொல்தமிழ் தேர் வாணர், ஏகமூர்த்தி (செ-5) அரிஹரதேவன், பாலநேத்திரன், நிமன், பத்தர் பராதனன், பரமேட்டி, தமிழ் வாணன், பஞ்சவன்னப்பிரகாசன், பஞ்சாட்சரன், நித்தியானந்தன், கஞ்சுகி பூஷணன், நஞ்சணிகண்டன், கோகனக சரணன், நாககரகங்கணன், அருவுருவன், ஈஸ்வரன் (செ-6) கங்காதரன் (செ-7) செஞ்சடையார், கோதைப் பரமர், கடவுள் மா மணி (செ-8) மதலை மலர் அலங்கன், உத்துங்கன், துங்கன், இலிங்கன், இந்து அணி விநோதன், பூதநாதன், மால் நேயன், மார்க்கண்ட சகாயன் (செ-9) தமிழ்த்தியாகன், கர்த்தன், அதிமோகன், யோகன் (செ-10), ஆரணன், அமலன், காரண நிமலன், பூரணவிமலன், சீரணி கமலன், பாடினர்க்கு உரியான், கோடுஇபத்து உரியான், அருணம் என்று உடலான் (செம்மேனி எம்மான்) கருணை அம் கடலான், பொருண்மலி மிடலான், திரிபுரத்து அடலான், மதிதனை வேய்ந்தோன், முதுமொழி ஆய்ந்தோன், (சங்கப் புலவர்) பரசு பாணியன், விரைசெறி வேணியன், தேவமகேசன், பாவ விநாசன், நாவலன் நேசன், விலாசன், கதைப் படையன், கருணை நிசங்கன், அகளங்கன், ஜோதி, போதன், நாதன், மழுவலன், எழுகரை நாடன், சிற்பரன், தற்பரன், ஆதி ஞானஜோதி, தாணு, எண்குணத்தர், எண்கணத்தர், ஆண் பதாகையன், ஆகமமுரசன், முக்கண்ணன், அந்திவண்ணன், மான் கொளும் கையினன், சர்வேசன், ஏகாசர், நித்தர், மெய்வாசர் (செய்-12) இமையவள் பாகர், விவேகர், மங்கை மோகர், நித்திய கீதர் (செ-18) என்ற மொத்தம் - 94 திருப்பெயர்கள் சிவப் பெயர்களாக இந்நூலில் குறிக்கப் பெற்றுள்ளன.

**மலைகள்:-**

அர்த்தநாரீசர் குறவஞ்சியில் பல்வேறு மலைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் கையிலை மலை சிவனாரின் வெள்ளிப் பனிமலையாகும். மூன்றாம் செய்யுளிலேயே

*கயிலை அங்கிரிச்*
*சயில வெஞ்சிலைப்*
*புயல்செய் கண்டனைப்*
*பயிலும் நெஞ்சமே*

என்ற வஞ்சி விருத்தத்தில் பூங்கோதை கயிலாய மலையைக் குறித்துள்ளார். மோகனாங்கி குறத்தியிடம் நீ சஞ்சரித்த மலைகளையெல்லாம் சொல்லடி என்றவுடன் குறப்பெண் பல்வேறு மலைகளைக் குறிப்பிட்டுக் கூறுகிறாள். அவற்றில் எந்தெந்த மலை எந்தெந்தக் கடவுளுக்கு வழங்கப்பட்டது என வரும் பகுதி சுவையான செய்தியாகும்.

காசிபன் முன் படைத்த பருப்பதங்கள் என்று குறத்தி குறிப்பிடும் பகுதியில் பகீரதன் கங்கையை மண்ணுலகத்துக்கு வரவழைத்தது போல் காசிபமுனிவர் மலைகளைப் படைத்தார் என்ற ஒரு பௌராணிகக் குறிப்பும் காணப்படுகிறது. இதன் மெய்ம்மைக்கு ஆதாரங்களைத் தேட வேண்டும்.

**ஆறுகள்:**

அர்த்தநாரீசர் மீது காதல் கொண்ட மோகனாங்கி குறத்தியைப் பார்த்து நீ நீராடி வந்த நதிகள் எல்லாம் சொல் எனக் கேட்டாள். அதற்கு அந்தக் குறப்பெண் திங்கள் முக மாதே எனத் தொடங்கி கங்கை, யமுனை, கோதாவரி, சிந்து, துங்கபத்திரை, தாமிரபரணி, பொன்னி, வைகை, நர்மதை, சரஸ்வதி, பொன்முகரி, பம்பை, கம்பை, மணிமுத்தாறு, என்ற நதிகளில் எல்லாம் நீராடியதாகக் குறிப்பிடுகிறாள். அப் பாடலில் கன்னவேணி, கிருஷ்ணவேணி, சுவேத நதி, திருசிலம்பாறு, வாரணாசி, கயா என வரும் சொற்கள் எவ்வெந் நதிகளைக் குறிக்கின்றது என நேரடியாகப் பொருள் கொள்ள முடியவில்லை. கன்னவேணி என்பது கர்ண தீர்த்தத்தையும், கிருஷ்ணவேணி என்பது கிருஷ்ணா நதியையும், வாரணாசி என்பது காசி, கங்கையையும் குறிப்பாய் உணர்த்தியதாகக் கொள்ளலாம். எஞ்சிய பெயர்களை ஆய்ந்து கண்டறிய வேண்டியுள்ளது.

குமரத் தீர்த்தம், பாபநாசத் தீர்த்தம், சிவ தீர்த்தம் முதலிய தீர்த்தங்களைப் பற்றிய செய்திகளும் இந்நூலினுள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**குறவர் மொழி :-**

மலைவாழ் மக்களாகிய குறவர்கள் தமிழ் மொழியைப் பேசினாலும் அவர்களின் உச்சரிப்புகள் சொல்லொலிகளை வேறுபடுத்தும். மலையிலிருந்தும் காடுகளிலிருந்தும் ஒருவரை, ஒருவர் விளிக்கும் போது உந்தி வளியை அழுத்திப் பேரொலி எழுப்பி மாத்திரை அளவுகளைக் கடந்து கூட்டி விளிக்க வேண்டி இருக்கும். அவ்வகையான தேவை மற்ற, மற்ற சொற்களையும்

அவ்வாறே உச்சரிக்கச் செய்து விடுவது இதற்கு ஒரு காரணம் எனலாம். இவர்களுடைய மொழி தமிழும், தெலுங்கும் கலந்த மொழி ஆகும். இதை வலியுறுத்தும் வகையில் கும்பேசர் குறவஞ்சி நாடகத்துள் குறத்தியின் பேச்சுகளில் பல தெலுங்குச் சொற்கள் கலந்து இருக்கிறது. இந்நூலில் அவ்வண்ணம் தெலுங்குச் சொற்கள் ஏதும் கலக்கவில்லை.

இந்நூல் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்துள்ளது. உரைநடைகளில் குறவர் மொழிகள் நிறையக் கலந்துள்ளன. செய்யுட்களிலும் பல குறவர் மொழிகள் உள்ளன. அம்மே! என்ற சொல் குறத்தியின் பேச்சில் அதிகம் கலந்து வருகிறது. இது அம்மா என்ற சொல்லே ஆகும்.

இங்கிலுள (பாட்டு-47) மாய்கை (பா-5) அதலோ, அமட்டுறானடி (பா-64) சொவுசு (பா-68) கும்பாய்ச்சி (பா-86) கெம்பாறடய்யே (பா-86) சிக்கிச்சுய்யே (பா-87) ஈய்ந்தேன் (பா-89) என்ற சொற்களைக் குறவர் மொழிகளாகக் கொள்ளலாம்.

**நிறைவுரை :-**

தமிழில் உள்ள குறவஞ்சி நூல்களில் பெண்பாற் புலவர் பாடிய இக் குறவஞ்சி நூல் தனித்துவம் கொண்டதாக விளங்குகிறது. ஆண்பாதி, பெண்பாதி, அதிலும் சரிபாதியாக விளங்கும் அர்த்தநாரித் திருக்கோலத்தை இவர் வர்ணிக்கும் பாங்கு பெரும் மகிழ்வைத் தருவதாகும். ஒரே திருமேனியில் ஆண்வர்ணனையும், பெண்வர்ணனையும் நிகழ்த்திக் காட்டும் அற்புதம் (செ-11) மிக்க சுவை நலம் தருவதாகும். நினைந்து நினைந்து இன்புறத் தக்க பல நயத் தொடர்கள் இந்நூலுள் மிகுதியாக உள்ளது.

வேதாந்த, சித்தாந்த சாத்திர அறிவுகள் நிரம்பப் பெற்றவர் இவ்வாசிரியர் என்பதற்கு இந்நூலில் பல ஆதாரங்கள் உள்ளன. பலதுறை அறிவு மிக்கவர் இந்நூலாசிரியர் என்பதற்கும் இந்நூலுள் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. பல்வகைப்பட்ட செய்யுள்கள் இந்நூலில் உள்ளன.

# அர்த்தநாரீசர் குறவஞ்சி

## காப்பு

1. திருவருள் செழிக்கும் நாகச்
சிகரியில் உகந்துஎந் நாளும்
அருமறைப் பொருளாய் நிற்கும்
அர்த்தநா ரீசர் மீதில்
பொருள்குற வஞ்சி நாட்டியம்
புகன்றிட இமயச் செல்வி
கருணைபெற்று உகந்து நாரீ(க்)
கணபதி காப்புத் தானே.

## அவையடக்கம்

2. அண்டர்புகழ் கொடிமாடச் செங்குன் றூருக்(கு)
ஆதியாய் அர்த்தநா ரீசர் தம்மேல்
தண்டமிழால் குறவஞ்சி நாட்டியம் தன்னைச்
சபையதனில் யான்புகழும் தகைமை கூறில்
புண்டரீகத்து அயன்நாவில் உறையும் வாணி
பொருந்துகல்வித் திறமையுள்ள புலவோர் முன்னம்
மண்டலத்தில் சிறுகுழவி வந்தும் எந்தன்
வல்லமைபார் எனப்பிதற்றும் வாறு அதுஆமே

## கடவுள் வணக்கம்

3. கயிலை அங்கிரிச்
சயில வெஞ்சிலைப்
புயல்செய் கண்டனைப்
பயலும் நெஞ்சமே

# சோலை மலை அழகர்

4. நீர்கொண்ட கங்கைநிலவு ஆர்கொண்ட செஞ்சடிலர்
நித்தியகல் யாணபர மித்திர மகேசர்
கார்கொண்ட குழலும்நறை வார்கொண்ட கொங்கை மலர்
காவி விழியும் கொண்ட தேவிஉமை பாகர்
ஏர்கொண்ட திருநாகம் மேல்கொண்ட அர்த்தநா
ரீசர்தமிழ்க் குறவஞ்சி நேசமகிழ்ந்து ஓத
தார்கொண்ட துளபமொடு சீர்கொண்ட மணி மார்பில்
தரிசோலை மலையழகர் திருவடிகள் துணையே

5. ஜெயது ஜெயது ஜெயதுங்க
ஜெயதுங்க ஜெய சங்கரா
கவுரிஜெய விபுதர் முனிவர்
பணிஜெய ஜெய நிசங்கா ஜெய

மங்களா கார ஜெய
பொங்கரா தார ஜெய
சங்கவர்ண மிகு ஜெய
கரபுயங்கா ஜெய

கொங்குவள நாட ஜெய
பொங்கரா மேரு ஜெய
வங்கண் உறை மதலை ஜெய
மிகு வலங்கா ஜெய

பங்கயன் தனது ஜெய
சங்கரா தார ஜெய
அர்த்தநா ரீச தேவ
உமைபங்கா
ஜெயது ஜெயது மங்களம்

ஆதிநட ராசருக்கு மங்களம்
கோதை அர்த்தநா ரீசருக்கு மங்களம்
நித்தியகல் லியாணருக்கு நீள் நாக பூணருக்கு
சொல்தமிழ் தேர் வாணருக்குச் சுபமங்களம்.

கரிஅதள் உரித்தவர்க்கு கங்கையைத் தரித்தவர்க்குத்
திரிபுரம் எரித்தவர்க்குச் செயமங்களம்
நாககிரி வாசருக்கு நாதர் கயிலாசருக்கு
ஏகமூர்த்தி அர்த்தநாரீசருக்கு (ஜெயது)

6. அரஹர தேவா நமோநமோ
கோதை அர்த்த நா ரீசுவரர் நமோ நமோ
நித்திய கல்லியாணபால நேத்திர நிமலனே
பத்தர் பராதன பரமேட்டி
சித்தர் மாதவர் முற்றும்
தேவர் இறைஞ்ச வளர்
நல்தமிழ் வாணா நமோ நமோ

பஞ்ச வண்ணப் பிரகாச
பஞ்சாட்சரனே அன்பர்
நெஞ்சகங் குடிகொண்ட
நித்தியானந்த
கஞ்சுகி பூடன கன்னி உமையோர் பாகா
நஞ்சணி கண்டா நமோ நமோ

கோகனக சரணா நமோ நமோ - எழில்
நாக கர கங்கண நமோ நமோ
தேகஅரு உருவே நமோ நமோ - உயர்
நாககிரி ஈசுவர நமோ நமோ

7. கங்கா தரனருள் மூடிக வாகன
கெஜமுக விக்கின விநாயகனே
கொங்கார் களவுடன் அறுகும் தலையணி
கும்பகம் பீர குணாகரனே

அம்போருகன் இமையோர்கள் தினந்தொழும்
அங்குச பாசமிகும் கரனே
கம்பா நதிதனில் அரியதவ முயலும்
கன்னி உமையவள் சொல் பாலகனே

பூகாடவி திகழ் கோதையில் அடியவர்
புத்தியில் உறைதரு வித்தகனே
வாகாகியபணி வெற்பினில் ஒற்றை
மருப்பின் ஆகிய வானவனே.

## விருத்தம்

8. கரித்தரக்கு உரியை போற்றும்
கடவுள்மா மணியால் ஊரம்
பரித்தசெஞ் சடையார் கோதைப்
பரமர்தம் வாசல் உற்றோன்
விரித்தநல் பிரபைசேர் கையில்
விளங்கிய மழுவும் மானும்
தரித்தநல் பிரம்பும் கொண்டு
சபைதனில் நந்தி வந்தான்.

## பராக்கு

9. மகிமைசேர் உமைபங்கா
மதலை மலர் அலங்கா
அகிக்ரி வாழ் உத்துங்கா
அர்த்தநா ரீசலிங்கா

சுந்தரன் தூதா பராக்கு – திரி
சூலி எதிர் நடனமிடும் பாதா பாராக்கு
இந்துஅணி விநோதா பாராக்கு – அன்பர்
இருதயத்தில் உறை பூதநாதா பாராக்கு

ஆலமுண்ட வாயா பராக்கு - சோலை
அசலமால் உளமகிழும் நேயா பராக்கு
சீலமிகும் தூயா பராக்கு - என்றும்
சிறக்கமார்க் கண்டன் சகாயா பராக்கு

மங்கை உமை பாகா பராக்கு - தெய்வ
மழவிடையில் அமர்பர நிசங்கா பராக்கு
கங்கை அணி துங்கா பராக்கு - ஞானக்
கருணை அர்த்த நாரீசர் லிங்கா - பராக்கு

10. கங்காதரா திங்கள்முடி எங்கோனே எச்சரிக்கை
செங்கோட்டு உறை துங்கா உமைபங்கா எச்சரிக்கை
நின்தாள் பணி உற்றேன் அருள் வைத்தாய் எச்சரிக்கை
அற்றார்நெறி பெற்றேன் இனிக்கர்த்தா எச்சரிக்கை

பண்டுஆலமே கண்டேயதை உண்டாய் எச்சரிக்கை
தெண்டாயுத வண்டார் புரங் கண்டாய் எச்சரிக்கை
வாகா அதி மோகா தமிழ்த்தியாகா எச்சரிக்கை
நாகா சல யோகா உமை பாகா எச்சரிக்கை

## அகவல்

11. ஆரணன் அமலன் காரண நிமலன்
பூரண விமலன் சீரணி கமலன்
தேடவும் தெரியான் நாடவும் அரியான்
பாடினர்க்கு உரியான் கோடு இபத்து உரியான்
அருணம் என்று உடலான் கருணைஅம் கடலான்
பொருண்மலி மிடலான் திரிபுரத்து அடலான்
மதிதனை வேய்ந்தோன் முதுமொழி ஆய்ந்தோன்
விதி தொழ வாய்ந்தோன் மதன் உடல் காய்ந்தோன்
பரசுஉறை பாணியன் விரைசெறி வேணியன்
உரம் உறு பூணியன் சுரர்பணி நாணியன்
தேவம கேசன் பாவ விநாசன்

நாவலன் தேசன் மேவும் விலாசன்
கதையெனும் படையான் மதலையம் தொடையான்
துதிஅலர் அடையான் கதிமக உடையான்
அருள்மலி துங்கன் தெரிவைதன் பங்கன்
கருணை நிசங்கன் பொருள்அக ளங்கன்
பொறைமிக்க வாதி இறைவற்ற நீதி
மறைமுற்றும் ஓதி நெறிபெற்ற சோதி
உறஉள மேதன் திறமிகு போதன்
நிறைவொடு பாதம் பெறவருள் நாதன்
கொழுவலன் காடன் மழுவலன் வேடன்
தொழும் உயர் வீடன் எழுகரை நாடன்
அரசுஎனப் பெரிய இரசதக் கிரியில்
இருந்திடத் தனிவன் அருந்தவ முனிவன்
என்றநல் பிறிங்கு தன்தவத் திறங்கண்
அணங்குஅர சமைய வணங்கிலன் அமைய
ஆகையால் ஈசன் பாகமே நேசம்
தரஇமை நினைத்த வரம்அது அனைத்தும்
தேர்ந்து ஞானத்தில் ஓர்ந்துதா னித்தன்
காரண அடிகள் ஆரணப் படிகேள்
இமையமாய் நின்ற சிமையமான் என்று
நிலத்திலே கம்பவ் தவத்தினில் நாடி
செயத்தவம் புரிதற்கு இயற்கை ஈதுஉரித்து என்று
எம்பிரான் அருள நம்பியுள் பொருள் எனது
எவ்வமும் நீங்கச் செவ்விதாய் ஆங்குப்
போந்து அரும்தவமே சார்ந்தனள் நவமே
நின்றுதன் பரனே என்ற சிற்பரனே
ஆதியே ஞானச் சோதியே ஆன
பரமனே நினைத்த வரம் எனக்கு அனைத்தும்
நல்கு எனக் கருத்தில் மல்கியே இருத்திச்
சோதனை தேறி கோதிலான் ஏசில்
உலகையே பெற்றுத் தவநிலை உற்று
காணவும் வேதத் தாணுவும் ஓத

துங்கவின் தலமாம் கொங்கு மண்டலம் என்று
அரவ வெற்பு அதனில் பரவை ஒப்பு உததி
காண்டயில் பதுமத்து ஆண்டயில் கதுமென்று
இனிதுடன் ஏகிப் புனிதமே ஆகி
மாதவம் செய்யில் கோதைநம் மெய்யில்
பாதிஈர் குவம் என்று ஓதிஏ குதலும்
போதகத்து உமையாள் ஏதம்அற்று இமையோர்
முனிவர் மற்றுஉள தானகனிவும் பெற்றுளமே
துதிசெயத் தொடர்ந்து கதும்எனப் படர்ந்து
கொங்குதென் கயிலை அங்கு அச் சயில
மீதுநல் தடம்மேல் போதுவின் இடமேல்
ஆனனம் என்னத் தான்அனம் என்னத்
தரும்தவ நிலையைப் பொருந்து அங்குஇலையென்
திறல்கெழும் இறையவர் அறிவர் நல்துறவர்
முருக்கு இலைச் சுருக்கு ஒல் திருக்கரம் உருக்கு
மனத் தொடும் கூப்பத் தனைப்புலன் காப்ப
பூதரப் பெருமான் மாதுஎனத் தருமான்
பற்று அகல் கருத்தின் நல்தகம் இருத்தி
ஏகமே நெறியா யோகமே குறியாய்
நின்றமின் கொடிகற்பு என்றுஉறை படிகண்
அருள் க(ண்)ஆர் வேதப் பொருள்க(ண்)ணார் பூத
நாதர்எண் குணத்தர் நீதர்எண் கணத்தர்
அருள்தவர் தெரிய இருள்தவர் இரிய
எய்தினர் துடிஏர் கையினர் அடியேன்
ஒக்கும்இன் நெறி அன்பாய்க் கனிந்து அறிவைத்து
எங்கணம் தொழவர இங்ஙனம் கொள்வீர்
அங்கம்ஓர் உருவாய்ப் பங்குதான் அருளாய்
ஈந்தனர் இடமாய் ஏந்திழைக்கு இடமே
செய்யகோ டீரமும் ஐயகுழல் பாரமும்
செய் பூதல் பார்வையும் கயல்விழிச் சேர்வையும்
நன்கு உழைப் பணியும் மின்குழை அணியும்
குமிழ்எனும் மூக்கும் அமுது எனும் தூக்கும்

கதைஅணி கரமும் நிதிவளைக் கரமும்
நவில் உரத்து இடமும் குவிமுலைத் தடமும்
கரியதள் தொடையும் உரியபட்டு இடையும்
பரிபுரத்து அடியும் வருசிலம்பு அடியும்
தங்கம்ஒல்கு ஆகமும் பிங்கலத் தேகமும்
மாட்சியாய் அடுத்துக் காட்சியே கொடுத்த
சங்கரம கேசன் எங்கள்தம் நேசன்
ஆதியில் பிரமன் ஓதற்குப் பரமன்
வானவர் மதிக்க மானவர் துதிக்க
உத்தர கயிலை இத்தலச் சயிலம்
தேம்கமழ் அகில்கள் கோங்குகற் பகங்கள்
மாகநாடு அலையார் நாகமா மலையார்
சென்னியம் மறையான் பொன்னிஅம் துறையான்
எங்கள் மாட்டு உறைவன் கொங்குநாட்டு இறைவன்
மேதையோ கத்தான் கோதையோ கத்தான்
அடுக்கும் எம்க(ண்)ணினான் கடுக்கைஅம் கண்ணினான்
சிந்தையர் உரியான் நந்தியூர் பரியான்
சுபமிகும் இதயன் இபமதில் உதயன்
மான்கொளும் கையினான் ஆன்பதா கையினான்
யோகம்என் அரசன் ஆகம முரசன்
வான்நில வரைக்கும் தானென உரைக்கும்
ஆதியும் ஈறா ஓதிய ஈறாய்
வந்தமுக் கண்ணன் அந்திஎன் வண்ணன்
சித்தர்சரு வேசர் நித்தர் ஏகாசர்
கர்த்தர்மெய் வாசர் அர்த்தநாரீசர்
பவனியைக் கண்டு கவனமே கொண்டு
புவனியில் பண்டு தவம்என விண்டு
தையல்வா கினியால் தெய்வமோ கினியாள்
மையலே பெருகி மெய்யெலாம் உருகி
அயர்ந்திடப் பாங்கி நயந்துவந்து ஓங்கி
சஞ்சலம் நீங்க மஞ்சரி வாங்கிக்
கொணர்குவன் நானே உணர்வுள தேனே

என்றுஅகல் போது நன்குற மாது
பிள்ளைமா றாப்பாய் மெய்ய வீறாப்பாய்
தெருவினில் வந்த(து) அரிவையும் அறிந்து
வரவு உரை சொல்லி விரவியே நல்ல
மங்கள வாசல் இங்கிதம் பேசித்
தெய்வமின் கண்டு மெய்உளம் கொண்டு
தொழிலும் நலமும் எழிலும் தவமும்
சாதியும் நெறியும் ஓதிய குறியும்
தெய்வநல் வாசமும் மெய்யண்ட கோசமும்
முறைமையும் வகையும் திறமைமு லிகையும்
புதுமைகள் உள்ளத்து அதன் எலாம் விள்ளச்
சிறப்புடன் பகரக் குறத்தியும் புகல
மோகினி மகிழ்ந்து வாகுடன் புகழ்ந்து என்
அகக்குறிப்பு ஆய்ந்து இகக்குறி ஓர்ந்து
கூறு என நின்றாள் வாறெண நன்றாய்
அங்குஅவள் வள்ளி மங்கையை உள்ளித்
தோத்திரத் தாலே மாத்திரைக் கோலே
நீட்டியே கொங்கு நாட்டினுக்கு எங்கும்
கர்த்தர் என் நேசர் அர்த்தநா ரீசர்
இங்குஉனை மருவப் பொங்கமாய் வருவர்
என்னவே தயவாய் உன்னியே இயல்பாய்
வரிசைகள் நீளப் பிரியமாய் மீள
முருகு அது குடித்துக் குருகினைப் படித்து
மங்கையை நாடிச் சிங்கனும் தேடிக்
கண்டுதான் சருவிப் பண்டுபோல் மருவி
இருந்துதான் இதயம் பொருந்திய கதையைச்
சூடிக் கொடுத்தாள் பாடற்கு அடுத்தாள்
ஆயினும் வேலை மாலிரும் சோலை
மலையினும் பழகி நிலைபெறும் அழகர்
அருளினால் இன்சொல் பொருள் எனும் புன்சொல்
நாடகம் தானே பாடினேன் நானே.

## விருத்தம்

12. மைத்துனர் ஆன சோலை மலையில்மால் மகிழக்கோதை
அர்த்தநா ரீசர்அன்ப தாய்வரும் பவனி தேர்ந்து
வித்தியா தரர்கள்போற்ற மேன்மையாம் செங்குன்று - ஊரைச்
சித்திரமாய் அலங்கா ரங்கள் செய்கின்றார் மிகவும் தானே.

## உலா அலங்காரம்

13. விண்ணவர் பரவும் கோதை அண்ணல் வருவார் என்ன
வீதியில் முரசுஅறைந்த சேதி அறிந்தே
துண்என எழுந்துமேவா வண்ணமணி சேர் பொன்னின்
தூண்கள் நிறுத்திவச்ர பாணிநகர் போல்

மாடமதில் மேடைஉயர் கூடகோ புரம்வச்ர
மாளிகை பொன் சூளிகை ஓர் நாழிகை தனில்
நீடுகொடி ஆடைஒரு கோடி நிறுத்தி - எங்கும்
நித்திலப் பொன்சுண்ணமிட்டுச் சித்திரம் வரைந்தே

தூண்முகட்டில் ஆதவன்தன் ஆண்மைகுன்ற வேவிட்டம்
சோதிவிடப் பந்தலிட்டார் வீதி தோறுமே
நாண்மலர் சேரும் விதானந்தான் நிறையவே - மாலை
நால்திசையும் தூக்கிவிட்டார் நேர்த்தி பெறவே

கன்னிவா ழையும் கமுகும் வண்ண வண்ணமாய் - நன்றாய்க்
கட்டிவைத்தார் வேகடையும் சட்டமாகவே
பொன்னினால் அமைத்துநவ ரத்தினம் அழுத்திக் கோடி
பூரண கலசம் வைத்துத் தோரணம் நட்டார்

சந்தனம் சவ் வாதுகொண்டு விந்தைவிந்தை யாய்நிலம்
தன்னை மெழுகிக் கோலமிட்டு உன்னதம் செய்தார்
கொந்துலவும் அகிற்புகை இந்துமண்டலம் என்னும்
கோடுதெரியாமல் மூடநாடிப் புகைத்தார்

திவ்யகோடி சூரியர்கள் ஒவ்வும் என்னவே ரத்தினத்
தீபம்இரு பால்நிறைத்தார் சோபனமதாய்
கொவ்வை இதழார் குழலில் மவ்வல் சூடியே
கோலமாய்த் திரித்துப்பாத சாலம் அணிந்தார்.

மால்அலங் காரத்திருச் சோலை மலையான்
மைத்துனர் ஆகிய கோதை அர்த்தநா ரீசர்
பாலலோசனம் குளிர ஞாலம் மகிழ ஊரைப்
பண்புடன் அலங்கரித்தார் சம்பிரமாகவே

## விருத்தம்

14. திருவட்ட ஐங்கரனும் முருக வேளும்
தேவிஅழ கம்மனும்வா னவரும் சூழத்
தருவுற்ற மேகவா கனனும் போற்றத்
தையல்உமை ஒருபாகம் தன்னில் தோன்ற
அருளுற்ற தெய்வரதம் அதனில் ஏறி
அர்த்தநா ரீசர்ஆனவர்க்கு அருளை நீட
மருவுற்ற கோதைநகர் வீதி தன்னில்
வண்மை உடனே பவனி வந்துற்றாரே

## பவனி

15. பவனி அதலோ வாரார்பாரும் - ஈரேழ்
அவனிபுகழும் கோதை அர்த்த நாரீசர்

சித்தர் வித்தியாதர் பாட - ரதத்தில்
தரிசனம் தனைக்கண்டு தேவர்கொண்டாட
பத்தர் முனிவர்க்கு இன்பம் நீடத் - தெய்வப்
பாவையர் எதிர்நின்று பாதத்தில் ஆட. (பவனி)

உம்பர் நாயகன் போற்றும் குணங்கள் கண்டு
உகந்தே துதித்துஇறைஞ்ச ஒருகோடி கணங்கள்
அம்புயம் மீதில்கொன்றை மணங்கள் வீச
ஆதவன் பிரமைஎன அணியாபரணங்கள் (பவனி)

சிந்துர முகன் நின்று துதிக்க - மெத்தச்
சிறப்பாய் மயில்மீதில் செவ்வேளும் சதிக்க
வந்தடி பணிந்தன்பர் கதிக்க - கோதை
வருமர்த்த நாரீசர் வையகம் மதிக்க (பவனி)

## மோகினி தோன்றுதல்

## விருத்தம்

16. கற்றநா வலர்கள் பாடல் கதித்திடும் கோதை ஊரில்
அர்த்தநா ரீசர் அன்ப தாய்வரும் பவனி தேர்ந்து
சித்திர மடந்தை யாரில் சிந்தையாய் மிகாமல் கொண்ட
முத்துமுத்தான தெய்வ மோகினி தோன்றி னாளே.

## மோகினியின் அழகு

17. தெய்வநன் மோகினிமாது - மெத்தச்
சிங்கார மாகவே வந்தாள்இப் போது
ஐயர்எனும் திருச்செங்கோட்டு
அர்த்த நாரீசர் கொலுவில்

மனதுக்கு ஒப்பனை எனலாகும் கங்கை பார்க்கில்
மாவடி வினில்இந்திராணி தங்கை
அனம்எனும் நடையில் மோகன மங்கை - உலகில்
அன்ன தருவுக்கு நிகரான செங்கை (தெய்வ)

பரத நாட்டியத் தன்னில் திருபீடம் - நன்றாய்ப்
பகரும் காமநூல் மிகவும் நீருடம்
சுரதலீலைக் கடலுக்கு இவள்ஓடம் - வளர்
துய்ய பஞ்சலட்சண முகபாடம் (தெய்வ)

பாவைஇடை மெல்லியநூல் மாத்திரம் - செய்ய
பங்கயம் எனலாம் இரண்டு நேத்திரம்
தேவரம்பைக்கு உண்டானதுஇவள் கோத்திரம் - திருச்
செங்கோட்டு அர்த்தநாரீசர்க்குஉகந்த பாத்திரம் (தெய்வ)

18. வாகர் இமையவள் பாகர் தவமிகும்
யோகர் மங்கையர் மோகர் விவேகர்
நாதர் சுரர்பணி பாதர் நித்திய
கீதர் சுந்தரன் தூதர் விநோதர்
ஈசர் பணிகிரி வாசர் அழகர்தம்
நேசர் அர்த்தநா ரீசர் மகேசர்.

## மோகினி வருதல்

19. தெய்வ மோகினி வந்தாளய்யா - ஒய்யாரமாகத்
தெய்வ மோகினி வந்தாளய்யா
செய்ய இதழ் பவள மெய்யில் அழகு ஒழுகு
தையலார் அரசு எனும் மைவளர் விழியாள்

மங்கையோ வயதுபனிரண்டு - வானோர்க்கு
அதிக மகிமையும் அதிசயங்கள் உண்டு
களபம்அணி கொங்கைகளும் இரண்டு மலர்ச் செண்டு
கூறும்கிளிபோல் இங்கித வசனமும் கற்கண்டு இசைத்தகலை

திங்கள் முகம்சொல் விளங்கு சவுந்திர
மங்கை நலம்கொள் இளம்குயில் எனவே (தெய்வ)

அரம்பையர்க்கு அதி அபரஞ்சி
நறைகமழும் செம்பதுமம் ஆனமுக வஞ்சி
தெளிந்த நல்ல சம்பிரம உல்லாச எழில் மிஞ்சி
தண்மலர்க்குழல் வம்புஅவிழ் மின்னாள் குளிர்ந்த நெஞ்சி
(தெய்வ)

மதிக்கும் ஈரேழ் அம்புவிதனில் - எழில்
விம்ப இதழ் மணி - இலம்பக
மணிவிழி அம்பு எனும் மாது (தெய்வ)

வேதன் முதல் தேவர் மறைஓது - மிக்குஆன
மலர்ப்போது தனில் வாழும்மட மாது

பொற்கொடி நிகர் ஓதும்
பரவைக்கு இரவில் தூது - உகந்துசென்ற
கோதை அர்த்தநா ரீசர்தம் மீது - குலவியநல்
காதலுமே வளர் மாது - சரோருக
வேதனுக்கு இசை ஓதிமம் எனவே (தெய்வ)

## விருத்தம்

20. நதிதனைத் தரித்த வேணி நாயகர் உறைசெங் கோட்டுப்
பதியினர் உமையோர் பாகர் பவனிகண்டு இரங்கி மாலால்
விதுமுக மோகனாங்கி மிக அயர்ந்திடப் பிராண
பதம்என இருக்கும் செல்வப் பாங்கியும் வந்துற் றாளே.

## மோகினியின் தோழி

21. வளர்தெய்வ மோகினிப் பாங்கி
மாது வந்தாளே
மயலால் உளம் வாடினோர்க்கு அதிக
நல்லஉசிதம் தந்தாளே

மோடியாய்ப் பிரிந்தோர் வந்து
முகத்தைக் கண்டோடி - நன்றாய்
வேடிக்கையாய் சேர்ப்பேன் என்றும்
விருது கொண்டாடி (வளர்)

பெண்ணைச் சேராமல் மிகவும்
பிரிந்தோர் நண்ணவே யானும்
கண்ணிமைபோல் சேர்ப்பதில் யாரும்
கருத்தில் எண்ணவே (வளர்)

மாது தெய்வ மோகினிப்பெண்
மயல்தீர இன்று இது என்
கோதை ஈசர் மாலை இப்பக்
கொணருவேன் என்றும் (வளர்)

## நாதர்மேல் காதல்

22. ஆசையால் மெலிந்தேனே மானே
அரவகிரி ஈசரைக் கூட்டிவா நீ தானே
பூவின்கணைகள் மாரன் ஏவிச் - சதிக்கும் வேளை
புலம்பச் செய்யுதே குயில் கூவி
பாவிதென்றல் புலிபோலத்தாவி - எனைவெறுக்கப்
பதறுதல்லடி எந்தன் ஆவி

நகைப்போல் எல்லார்க்கும் ஏச்சாச்சே - வன்னெஞ்சர் மீதில்
நான்கொண்ட மையல் வெள்ள நீச்சே
செகத்தில் எங்கும்அவர் பேச்சே - அல்லால் வேறில்லை
சிவசிவா வெட்கம் வீணே போச்சே (ஆசை)

நெட்டானவர் என்று எண்ணினேனே - காதல் கொடிதாய்
நெஞ்சுஅ புண்ணாகி மெலிந்தேனே
நட்டாற்றில் கோரைபோல் ஆனேனே - அரவகிரி
நாதர் வருவாரோ சொல் மானே (ஆசை)

## விருத்தம்

23. வேரிகைப் பரசர் கோதை விமலர்தம் மயலால் சிந்தை
சாரிகை என்னச் சுற்றித் தயங்குதல் அறிந்து பாங்கி
நாரிகை வசப்படுத்த நான்சொலிக் கொணர்வேன் என்ன
காரிகைக்(கு) உயர்வசந்த காலம் வந்(து) அடுத்த(து) அன்றே

## காலம்

24. தெள்ளுதிரைக் கடல்ஒலிகள் முழங்கும் காலம்
தென்மலயக் கால்அடர்ந்து வீசும் காலம்
கள்ளுலவு குமுதமுகை அவிழ்க்கும் காலம்
காவில்வரிக் குயில்இனங்கள் கூவும் காலம்
புள்ளினங்கள் மதுநுகர்ந்து பாடும் காலம்
போர்மதன் அம்பு தொடுத்து எய்யும் காலம்
வள்ளல் செங்கோட்டு ஈசரைப் பஞ்சணையின் மீது
மருவி விளைஆட நல்ல வசந்த காலம்.

25. விந்தை மாரனதலோ இக்குவில் வளைக்கிறான்
பந்தங்கூறி எந்தன் மார்பைத் துளைக்கிறான்

என்ன செய்குவேன் மானே - மனதில்
எண்ணி எண்ணி நானே
அன்னம் அருந்திலேனே
ஆவியும் பொருந்தேனே (விந்தை)

விளங்கும் எந்தன் எவ்வனமும் வீணே போகுதே
களங்கம் அற்றசிலம்பு புவியில் கதை ஆகுதே (விந்தை)

ஒருவரும் துணை காணேன் எங்குன் உள்ளம் உருகுதே
விரக லாகிரி மிஞ்சிக் காம வெள்ளம் பெருகுதே (விந்தை)

கொடிது கொடிது மெத்தமயல் கொள்ளலாகுமோ
துடிதுடிக்குது நெஞ்சில் வருத்தம் சொல்லப் போகுமோ
(விந்தை)

மகிழ்ந்து தேவர் வழுத்தும் சோலை மலையில் விண்டுதான்
அகங்கட்கு இசைந்த நாகவசலர்க்கு ஆசை கொண்டுதான்
(விந்தை)

## விருத்தம்

26. அருள்திரு நாக வெற்பில் அம்பிகை பாகர் மீதில்
பெருகிய மாலால் தெய்வப்பெண் கொடி துவண்டு வாடிக்
கருதிய மாரனுக்குக் கவின் செய்யும் கவிகை என்ன
வருமதி அதனைக் கண்டு மங்கையும் புலம்பு வாளே

## வெண்ணிலா

27. ஏந்திழையோர் தமக்கு அன்பு கூர்ந்தும் ஆனந்தம் நல்கும்
சாந்தகுணம் உள்ள வெண்ணிலாவே
தேர்ந்து அழல் போல என்னைக் காய்ந்து பெண் பழிக்கும்மடி
ஏந்தலாமோ வெண்ணிலாவே
பேதையர்கள் தம்மைவெகு வாதை செய்து புருஷ
நீதியோ சொ(ல்)லும் வெண்ணிலாவே

பூதலத்திலும் மடமாதர் வசையால் உடலம்
பாதிஆகினாய் வெண்ணிலாவே
திருவுடனே பிறந்து எம்தன் அருமை தெரியாது என்றன்
தருமமோ உரை வெண்ணிலாவே
இரவு பகல் என் மீதில் வருமம் செய்திடும் உன்னை
அரவம் தீண்டாதோ வெண்ணிலாவே
கொடிதான அரக்கர்சிவனடி தொழுதார் அல்லால்
முடி ஏறினாரோ வெண்ணிலாவே
கொடிமாடச் செங்குன்றூர்க்கு உடைய சிவன் சேரில் உன்தன்
குடிலம் என் செயும் வெண்ணிலாவே.

## விருத்தம்

28. கமலமலர்த் தடங்கழனி புடைசூழ் கோதைக்
கனநகரில் பணிகிரியில் கர்த்தன் எம்கோன்
அமலனர்த்த நாரீசருக்கு அதிமோகம் கொண்டு
அரிவை தெய்வ மோகினியும் அம்புலியால் வாடி
தமனியமேனியும் பசப்ப உருகும் வேளை
சதுமுகன் சேய் முனியசலம் தன்னில் தோன்றி
அமர்பொருத்த(து) அழல்தூவ மலயக் கால்வந்(து)
அடர்கின்ற போதுமிக அயர்கின் றாளே.

## தென்றல்

29. மலய வெற்பிலே பிறந்தும் தென்றல் காளோ - மேனி
அலையக்கனல் அலையாய் வந்தாய் தென்றல் காளே
சிலைமதனுக்கு இரதம் ஆன தென்றல் காளோ - ஆதி
சேடன்முன் உன் வாதும் கண்டேன் தென்றல் காளோ

சீதள குணம் விடுத்துத் தென்றல் காளோ - அந்தச்
சாதவேத ரூபம் கொண்டாய் தென்றல் காளோ
ஆதியாம் அர்த்தநாரீசர் தென்றல் காளோ - என்மேல்
மா தயவானால் என்செய்வாய் தென்றல் காளோ

## விருத்தம்

30. சித்தர்கள் பரவு நாகச்
சிகரியில் வாழும் எங்கள்
அர்த்தநாரீசர் தம்மேல்
அதிகமாம் விரகத் தாலே
மெத்தவே மலயக் காலால்
மிகத்துயர் ஆன போது
சித்ரமாம் குயில்கள் கூவத்
தேன்மொழி புலம்பு வாளே

## குயில்

31. மையல் பொறுக்கவச மல்லவே குயிலே
வாது செய்கின்றாய் என்மேல் வன்மமோ குயிலே
வையகம் தனில் ஆர்க்கும் மகிழ்ச்சி தரும் குயிலே
மனம் சௌத்து எனை மெத்த வருத்தினாய் குயிலே

காமன் கணையால் மனம் கலங்குதே குயிலே
கங்குல் நூறுயுகமாகக் காணுதே குயிலே
சோமம் செந்தமிழ் கொண்டு தூவுதே குயிலே
தோகையர் வசையாலும் துயர் ஆனேன் குயிலே

பாலும் முக்கனியும் வேம்பாகுதே குயிலே
பாரினில் நீயும் பட்ச பாரமோ குயிலே
கோல மலர் அணையில் கூடவே குயிலே
கோதை வாழ் ஈசர் வரக்கூவாய் நீ குயிலே

## விருத்தம்

32. பாரினில் கயிலை நாகப்
பருப்பதத்(து) ஈசர் மாலால்
காரிகை மிகவும் அந்தக்
கருங்குயில் தொனியால் வாடி

பேரிஅம் பாயல் நீத்து
விழி உறங்காது வெய்ய
வாரியின் ஒலி கரங்க
மனம் மிக அயர்கின்றாளே

## கடல்

33. பாரில் நிறைந்திடும் கடலே - ஆர
வாரம் செய்வதென்ன கடலே
மாரன் கணையாலே கடலே - வெகு
வாதைக்கு இடமானேன் கடலே

திங்கள் அனலாலும் கடலே - வீசும்
தென்றல் பகையாலும் கடலே
அங்கம் புண்ணாகினேன் கடலே - எனக்(கு)
அஞ்சல் என்பார் காணேன் கடலே

மெத்த ஏன் சிறுறாய் கடலே - என்தன்
மீதில் பகை உண்டோ கடலே
அர்த்தநாரீசர் கடலே - மேவி
அணைந்தால் நீஎன் செய்வாய் கடலே

## விருத்தம்

34. பொலன் கொடி மாடம் சேர்ந்த
பொற்புஉயர் கோதை நாக
விலங்கல் மீது உகந்து ஞான
விமலர்தற் பரமர் தேவர்
அலங்கல்மேல் மால்கொள் மோக
னாங்கியும் கடலால் நெஞ்சம்
கலங்கியே அயரும் போது
காமன் வந்து எதிர்த்தான் அன்றே

## மன்மதன்

35. ஆசை கொண்டதைக் கண்டு மோசம்
செய்யலாமோ பஞ்சபாணா என்னை
அஞ்சல் என்று உரைத்திட்டால் கொஞ்சம் வருமோ
சொல்லாய் பஞ்சபாணா
அரிவையர் வசையாலே உருவிலி ஆகியும்
பஞ்சபாணா பெற்ற
அன்னை இல்லத்தையும் சின்னபின்னம்
செய்தாய் பஞ்சபாணா
சிலைக் கரும்பினை என்தன் முலை யானைக்கு
அளித்தேனோ பஞ்சபாணா உந்தன்
திங்கள் குடையை முகில் பைங்குழல்
மறைத்ததோ பஞ்பாணா
சொலற்கு அரியதாகிய மலர்க்கணை ஐந்தனையும்
பஞ்சபாணா எம்தன்
சுரிகுழற்கு அணிஆகப் பரிவுடன்
முடித்தேனோ பஞ்சபாணா
விரகமே தரும் தென்றல் அரவுக்கு எதிராகும்
பஞ்சபாணா உன்தன்
விந்தை நான் அளிக்கு எதிர் முந்தும் செண்பகம்
உண்டு பஞ்சபாணா
வளமைசேர் திருமலை அழகர் தினம் மகிழும்
பஞ்சபாணா - கோதை
வாசர் அர்த்தநாரீசர் நேசமாகில் என்
செய்குவாய் - பஞ்சபாணா

## விருத்தம்

36. வானின் மதித் தழலாலும் தென்றலாலும்
மாங்குயிலால் வாரிதியால் மதனன் தன்னால்
தேனின் மொழி வனிதை தெய்வ மோக னாங்கி
சிந்தையெலாம் உருகிமெத்தத் தியங்கி வாடிக்

*கானமயில் சாயல் எனும் சகியதான்*
*கண்மணியாம் பெண்கள் சிரோ மணியை நோக்கிற்*
*தான் இசைந்து மனது அடங்கா விரகம் கொண்ட*
*தகைமைஎல்லாம் இயல்புடனே சாற்றுவாளே.*

## உரை நடை

அகோ, அதெப்படி யென்றால் வாரும் தெய்வமோகினிப் பெண்ணே. சகல ஆன்மாவிடத்திலும் தான் அவனாக நிறைந்திருக்கபடா நின்ற அர்த்த நாரீசுவரர் பவனி வரக்கண்டு மனதில் மிகுதியான மையல் கொண்டு சந்திரனாலேயும், தென்றலாலேயும், குயில் கடல் பஞ்சபாணன் இவைகளாலேயும், தேகத்தில் விதனங் கொண்டு பரவசமாயிருக்கிற உனது காரியம் நிறைவேறும் படிக்கு அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகன் அனந்த வேத சாத்திர ஞான சொரூப பஞ்சவன்னப் பிரகாசராகிய அர்த்தநாரீசுர மகாதேவர் அரசுபுரி தட்சண கயிலாசமெனும் ஸ்ரீ நாககிரி தன்னிலேயிருந்து கொஞ்சு கிளியென்றும் அபரஞ்சி எழில் மிஞ்சி மந்திர தந்திர மூலிகாப் பிரயோக சித்தியுண்டாகிய குறவஞ்சியென்னும் மாது கோதை நகரம் என்னும் பட்டணத்தில் வந்து சகலமான மங்கையர்களுக்கும் அவரவர் மனதிலே நினைத்திருக்கிற காரியங்களெல்லாம் நிலவரமாக அறிந்து சொல்லியும் தானே நிறைவேற்றிக் கொடுத்துப் பரிசு ஆடையாபரணம் மெத்தவும் வாங்கி வருகிறாள். அவளைக் கூட்டி வந்தால் நீ நினைக்கிற காரியங்களெல்லாம் கைகூடும் என்று பாங்கி சொல்ல, தெய்வ மோகினி இது வெல்லாங்கேட்டு அதிக சந்தோஷமாகி அப்படியே குறத்தியை அழைத்துவரச் சொல்லிக் குறத்தி வருகிற மார்க்கம்.

## அகவல்

37. *சித்தர்கள் சுரர்கள் வித்தியா தரர்கள்*
*பத்தர்தம் நேசர் அர்த்தநா ரீசர்*
*எழில்பணி மலையாள் களபமென் முலையாள்*

உழை எனும் நடையாள் இழை எனும் இடையாள்
பால் எனும் மொழியாள் வேல் எனும் விழியாள்
வாலிபக் குயிலாள் நீலமா மயிலாள்
முலைக்குடம் குலுங்க நலப்பணி அலுங்க
மலர்க்கரம் மலுங்க குலக்குழை துலங்க
மிக்கா நடமும் மக்கா வடமும்
விக்கா மணியும் மெய்காரணியும்
சாத்திரம் புகலும் மாத்திரைக் கோலும்
தடக்குறக் கூடை இடுக்குநல் பேடை
மெலுக்கு எனச் சிலம்பு கலுக்கெனப் புலம்ப
வால்வளை ஒலிப்ப பால்மொழி கலிப்ப
விறல்தனு உருவைப் பரித்திடும் புருவம்
நெறிப்புடன் நகைத்துச் சிறப்பினில் மிகுந்து
யாவரும் தொடரப் பூவையர் படர
கொஞ்சிய சுகந்தம் மிஞ்சியே உகந்த
ரஞ்சித மாய்க்குற வஞ்சிவந் தனளே.

## வஞ்சித் தரு

38. வஞ்சி வந்தாளே - செயமிகு
வஞ்சி வந்தாளே

வஞ்சி எனும் எழில் மிஞ்சி நலமொடு கொஞ்சி
வளர்கிளியின் சொல்லாள்
கஞ்ச முக மனமிஞ்ச நடை நல
விஞ்சை உரை அபரஞ்சியாம் (வஞ்சி)

களப நற உயர் இளநனை முலைமணி
ஒளிகளது தளதள எனவே
இளமை மிகும் ஆதி அழகும் இனியகை
பழகும் வளைகல கல எனவே (வஞ்சி)

வட்டமுகநுதல் பொட்டும் அதிஉயர்
சுட்டிஉடன் நகை மட்டிலாச்
சட்டமாய்க் குறி மெட்டிலா மலே
திட்டமாய்ச் சொலக் கெட்டியாய் (வஞ்சி)

தேசம் உள கவிராசர் புகழ்விசு
வாசர் அடியவர் நேசராம்
பூசை நெறிகொள் மகேசர் பணிகிரி
வாசர் அர்த்தநாரீசர் நாட்டினில் (வஞ்சி)

## குறவஞ்சி வந்தாள்

39. குறவஞ்சி வந்தாள் பராக்கு - மேன்மைப்
பிறமிஞ்சக் குறி சொன்னால் பிறக்கும் மெய்வாக்கு

வச்சிரப் பதக்கம் துலங்கக் கையில்
பச்சிலைக் கடையம் பரிவாய் இலங்கக்
கச்சணி கொங்கை கலுங்க - மார்பில்
கதிக்கவே அணி முத்துமாலை அலங்க (குறவஞ்சி)

மதிக்கத்தன் வல்லமை பேசி
மலை மங்கை பங்கன் மேல் மனம் விசு வாசி
இதமுடன் வருவாள் கைவீசி - கமழ்ந்(து)
இருக்கும் கஸ்தூரியை இயல்பாகப் பூசி (குறவஞ்சி)

செங்கையில் மாத்திரைக் கோல் காட்டி - நன்றாய்
வேல்விழிக்கு அஞ்சனம் செயமாகத் தீட்டிப்
பங்கய வதனிசீமாட்டி - தெய்வப்
பணிகிரி தனில் அர்த்தநாரீசர் நாட்டில் (குறவஞ்சி)

## வாசல் வளம்

40. *கொங்கில் எழுகரை நாட்டில் ஏரகம்*
*கோதை ஆனசெங்குன்றூர் விளங்கிய*
*மங்கை பங்கர்தம் மீதினிலே மிக*
*மையல் கொண்டு வரும் மோகனாங்கி தான்*
*பொங்கமாய் மகிழ் பாங்கி உரைத்திடப்*
*புகழ்ந்து கொண்டு அந்தத் தெய்வ மின் மாடத்தை*
*இங்கிதக் குறவஞ்சி அறிந்து தான்*
*இசைந்து வாசல் வளஞ் சொல்வள் காணுமே*

41. *திருமகள் சேர் வாசல்இது அம்மே*
*செல்வம் உள்ள வாசல் இது*
*அருள்சிறந்த அபிராமி பாடி*
*அகம் மகிழும் வாசல் இது*
*சுருதி முனிவர் இமையோர் என்றும்*
*துதிபரவும் வாசல் இது*
*அரிவையர் அரம்பையர் நாட்டியம் என்றும்*
*ஆடல்பெறும் வாசல் இது*

*மூவுலகும் புகழ்ந்திடவே - மும்*
*முரசறையும் வாசல் இது*
*பாவலர் கின்னர் உடனே - தெய்வப்*
*பாமலியும் வாசல் இது*
*மாவரங்கள் அவரவர்க்கு அம்மே*
*மனுநிறைந்த வாசல் இது*
*தேவர்அர்த்த நாரீசர் அம்மே*
*தெய்வ மின்னாள் வாசல் இது*

## உரை நடை

அம்மம்மே ஏயம்மே! தானஞ்செய்யும் வீடு; தன்மம் செய்யும் வீடு; பாக்கியமுள்ள வீடு; பவுசுள்ள வீடு இந்தப் பட்டணத்திலே அதிக சம்பத்துள்ள வீடு; இந்த வீடம்மே.

## விருத்தம்

42. வாரண மருப்பாம் கொங்கை வரிவிழிக் குறப்பெண் மானே
ஆரணம் பரவும்கோதை அர்த்த நாரீசர் நாட்டில்
தாரணி மதிக்கும் வாசல் தகமையை உணர்ந்தாய் நன்றாய்
சீரணி உந்தன் சாதித் திறமையை உரைசெய் வாயே.

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே நீ சொன்ன வாசல் வளமெல்லாம் கேட்டு மெத்தவும் சந்தோஷ மாச்சுது. உங்கள் சாதியும் முறைமையும் சொல்லடி பெண்ணே. சொல்லுகிறேன் கேளடி அம்மே.

43. சாதி மரபின் முறைமை கேள்அம்மே காலையில் முழ்கிச்
சரவணபவன் தன்னைத்துதி செய்குவோம்
மாது எங்கள் தெய்வ வள்ளியை - மனதில் உள்ளி
மலரும் சாத்தித் தினமும் பணிகுவோம்.

தேனும் செந்தினை மாவும் கலந்து ஒன்றாய் - மிகவும் பூசை
செலுத்திப்புசித்து அகத்தில் மகிழுவோம்
பூனைக் காலிச் சங்கு மணியுடன் - நவமணிகளும்
பூண்டு சிங்களைப் புணர்ந்து மகிழ்வோம்

அமையதாக அன்னிய புருடரைக் - கனவு தனிலும்
ஆசையாகச் சேர்வது இல்லையே
கமைபெற நன்றாய் உலகுதன்னிலே - எங்கள் சாதி
கற்பின் வழியாகப் நிற்பம் நாங்களே.

தம்பி மனைவி தமயன் விரும்புவோம் - புதுமணம் செய்
சாரயங்களும் மதுவும் வேண்டுவோம்
உம்பர்மதிக்கக் குறிகள் ஓதுவோம் - எதிர்ந்த பேரை
உருட்டிய விழியால் மருட்டி வெல்லுவோம்

*திங்கள் தவழும் சோலை செறிந்திடும் திருச்செங்கோட்டில்*
*சிறந்து வாழும் தேவர் தேவனார்*
*எங்கள் நாக கிரியில் உகந்தவர் அர்த்த*
*நாரீசர் நாட்டில் தெய்வ மங்கையே . . .*

## கலித்துறை

*முத்தைச் சிகரத்து அருவிகள் நீடு முனிவன் மல*
*யத்தைப் பொரும்பணிக் குன்று ஈசர் நாட்டில் அமுதமொழி*
*தத்தைக்கு இணைக்குற மானேஉன் சாதி உரைத்தாய்*
*வித்தைப் பிரபலம் எல்லாம் அறிய விளம்புவையே*

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே! உன் சாதி முறைமையும் சொல்லக் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. உன்சாதி வித்தையைச் சொல்லடி பெண்ணே! சொல்லுகிறேன் கேளடி அம்மே!

## காலம்

45. *இத்தலத்தில் எங்கள் வித்தை எங்கும் பிரசித்தம் கோதை*
*அர்த்தநாரீசர் நாட்டில் அரிவையே கேள்*
*எண்ணும்பதி னாறுஇருக்க விண்ணவரைத் தானழைக்கக்*
*கண்ணிலாப் பேர்களுக்குக் கண்கொடுக்கத்*
*தண்ணியின் மீதில் நடக்கப்*
*பெண்ணுரு ஆணுருவாக*
*மண்ணுலகை விண்ணுலகம் ஆக்குவிக்க (இத்தலத்தில்)*

*மெல்ல நடந்துவரும் மாருதம் கையில் அடங்க*
*மேதினியில் ஊமைகவி மிகவும் சொல்ல*
*சாரூப பதம் கொடுக்கத் தாருவை வரவழைக்கத்*
*தந்திரம்செய்இந்திர சாலந்தான் செய்குவோம் (இத்தலத்தில்)*

*புருஷர் தொடரச் செம்பொன்*
*வருஷம் பொழியத் தினம்*
*பூமளும் வந்து தினம் பூரித்திடச்*
*சரசமாய்க் கைகாட்டினால்*
*அரசர் முடிவணங்கச்*
*சந்திரனைச் செந்தணலாய்த் தான் செய்குவோம்*
*(இத்தலத்தில்)*

*அக்கினி குளிர்ந்திருக்கத்*
*திக்கயங்கள் தான் நடுங்க*
*ஆலகாலம் தன்னை அமுதாக்கி வைப்போம்*
*தக்கபுக ழே படைத்த*
*முக்கண் அர்த்தநாரீசர்*
*சங்கரர் தான் நாட்டில் வளர் தங்க முத்தே*
*(இத்தலத்தில்)*

## கலித்துறை

46. *வான்மதிக் கங்கைச் சடாடவியன் மலை மாதினுக்குத்*
*தான்உர கச்சயிலத்து இடந்தந்தவர் தன் சிலம்பில்*
*கானக் குறமயி லேநீங்கள் வாழும் கவின் பொருப்பை*
*மானத் துடன்இயல் பாய் நான் அறிய வர்ணிப்பையே*

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே! உங்கள் சாதிவித்தை எல்லாம் சொல்லக் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. நீ சஞ்சரித்த மலையெல்லாம் சொல்லடி பெண்ணே. சொல்லுகிறேன் கேளடி அம்மே

## மலை

47. *கனகமலை வெள்ளிமலை கருணை தரும் சோலை மலை*
*இனிய காளத்தி மலை எழில் பழனி மலையும்*
*விந்தை மலை பன்றிமலை மேலான பொதிய மலை*
*தந்திமலை சுவாமி மலை சஞ்சீவி மலையும்*

கஞ்சமலை சென்னி மலை கருது கிட்கிந்த மலை
மஞ்சுலவுந் திருத்தணி மலை நயினா மலையும்
திருவளரும் வேங்கடகிரி தீர்த்தகிரி வேதகிரி
அருணகிரி ரத்தினகிரி அதிகபரங் கிரியும்

சதுரகிரி நாமகிரி சங்ககிரி நீலகிரி
உதயகிரி அத்தகிரி ஓங்கல் உளது எல்லாம்

பங்கயம் சொல் காசிபர் முன்
படைத்தபருப் பதம் களெல்லாம்
இங்கு உலகில் பறப்பதனை
இந்திரன் இதை அறிந்து

குலிச மதில் சிறகு அதனைக்
குறைத்திடவே சிறிதோடி
அலைகடலால் புகவே சில
அகிலம் உள்ளது அம்மே

இங்கிலுள கிரி நிலத்துக்கு
இறைமுருக வேள் அதனால்
எங்களுக்குச் சார்ந்து இனி
யாங்கள் கொடுத்தது கேள்

வெள்ளிமலை ஈசருக்கு
வேங்கடமலை நாரணர்க்கு
உள்ள மகிழ்ந்து இமையவர்க்கு
உயர்மேரு கிரியும்
கலைமுனிக்குப் பொதிய மலை
கஞ்சமலை சித்தருக்கு
அலர்மகள் சேர் சோலை மலை
அழகருக்குத் தயவாய்ப்
பழனிமலை முதலான
பருப்பதங்கள் உள்ளது எல்லாம்
வளமையுடன் அவரவர்க்கு
வரிசைஅறிந்து அளித்தோம்

*புரவலர் விண்ணவர் முனிவர்*
*புகழும் அர்த்தநாரீசர்*
*அரவகிரி நாங்கள் குடி*
*இருப்பதடி அம்மே*

## விருத்தம்

48. *சிலைநுதல் குறப்பெண் மாதே செகத்துஉள கிரிகள் எல்லாம்*
*நிலைபெற உரைத்தாய் என்முன் நிமலி அம்பிகை மாதேவி*
*தலைவர் செங்கோட்டின் ஈசர் தழைத்த தென் கயிலை நாக*
*மலை அதி சயங்கள் எல்லாம் மகிழ்ந்துநீ யுரைசெய் வாயே*

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே! சொன்ன மலைகள் எல்லாம் சொல்லக் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. நீ வாசமாய் இருக்கின்ற நாககிரியில் உள்ள அதிசயம் எல்லாம் சொல்லடி பெண்ணே. சொல்லுகிறேன் கேளடி அம்மே

## செங்கோட்டின் சிறப்புகள்

49. *அதிகமாம் பணிகிரியிலே - நல்ல*
*அதிசயம் சொல்லக் கேளாய்*
*அன்னமே உயர் சொன்னமே*
*அபரஞ்சியே தெய்வ வஞ்சியே*

*சதுமுகன் குகன் முனிவர் வானவர்*
*சந்திரன் பானு இந்திரன்*
*தக்க விஞ்சையர் திக்குளோர்களும்*
*முக்கியம் ஆகக் கைகுவிப்பார்*

*சந்ததம் பணி மந்திரம் தனை*
*சிந்தை கூரவந்து இறைஞ்சில்*
*எந்த நாளும் நல்இந்திர போகத்தை*
*விந்தையால் உகந்திருப்பார்*

நந்து உலாவிய வந்திகுன்றம் என்
அந்தமாம் பொருப்பதனை
முந்தலூர் வலம் சிந்தையாய் வர
மைந்தர் வேட்டது பெறுவார்

பிலத்து வாரத்தின் நலத்தையே இரு
நிலத்திலே சொல்லத் தகுமோ
சலத்து வேணி அம் பலத்தர் அன்றி விண்
தலத்தரும் சொல அறியார்

வண்மை சேர் இல் குமரதீர்த்தமுண்(டு)
உண்மையாய்க் கண்டு படிந்தால்
அண்ணல் ஆயிரக் கண்ணனும் தொழப்
புண்ணியம் மிகப் பெறுவார்

பாவ நாசம் செய் தீர்த்தம் உண்டு அதை
ஆவலாய் மனம் நினைத்தால்
மாவினைப் பஞ்ச பாதகங்கள் போய்த்
தேவராய் என்றும் வாழ்வார்

தந்திமா முகன் தீர்த்தம் உண்டதை
வந்து கண்டுடன் பணிந்தால்
மைந்தர் எம்புலி உருவம் மாறியே
சந்ததம் புவி புரப்பார்

விண்டுமால் சிவதீர்த்தம் உண்டு அதைக்
கண்டு தோத்திரம் செய்தால்
அண்டருக்கும் எட்டாத சாயுச்சியம்
உண்டு காணடி அம்மே

தகமையான திக்குஆயிரம் சுனை
மகிமைதான் சொலக் கேளாய்
இக பரந்தனில் கண்டு தேவர்கள்
எவரும் தான் சொல அறியார்

ஆனைசிங்கமும் கூடியே விளை
யாட மூலிகை உண்டு
மானுடன் புலி சேர்ந்து தான் வர
வானமூலிகை உண்டு

மானிலத்தவர் விண் நாடராகவும்
தானும் ஓரிலை உண்டு
பூனையானது ஆனையாக ஓர்
புல்லுருவியும் உண்டு

சூலபாணியன் மாலயன் மூவர்
தொடர ஓர் திரிகை உண்டு
வேலை ஏழினும் சுவறியே மன்னும்
மேவ மூலிகை உண்டு

மிகவும் மேன்மைகளான காரணம்
மெத்த உண்டடி அம்மே
அகமிகிழ் அர்த்த நாரி ஈசுவரர்
அதிக நாட்டில் பெண் மானே

## விருத்தம்

50. நற்றமி ழோர்கள் போற்றும்
நாகமா மலையில் வாழும்
அர்த்தநாரீசர் நாட்டில்
அரிவையே குறப் பெண் மானே
மெத்தவே மலையின் வண்மை
மேன்மையே உரைத்தாய் நன்றாய்ச்
சுத்தமாய் விளங்கு மண்டத்
தொகுப்பெலாம் உரைசெய் வாயே

## உரைநடை

அகோ பாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே! நீ சொன்ன மலை அதிசயம் எல்லாம் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. நீ சஞ்சரித்த அண்ட கோளத்து அதிசய மெல்லாம் சொல்லடி பெண்ணே! ஆனால் சொல்கிறேன் கேளடி அம்மே!

## அண்டகோளம்

51. *ஆகமுடன் அண்ட கோளத்து அதிசயம் சொல்வேனே*
*நாககிரி அர்த்தநா ரீசர் நாட்டில் மானே*

*நீங்காத மாய்கையுடனே நிலைமை மகத்துவமாய்*
*ஆங்காரம் மூன்றும் கலந்த அண்டம் ஒன்று உண்டம்மே*

*அவ்வண்ட முகட்டில் பிரம்ம ஆதி சத்தியலோகம்*
*திவ்விய அயனுலகுக்கு இப்பால் தெளிந்த மகாலோகம்*

*சுத்த தவலோகம் சனலோகம் சுவலோகம்*
*வைத்தபுவ லோகமுதல் வாழ்வர் இமையோர்கள்*

*திங்கள் வெண்கதிர்கால் புயல்சேர் மண்டலம் அம்மே*
*துங்க மானிடர்கள் வாழும் தொல்புவி மண்டலமே*

*அங்கு அதில் நாவலம் தீவு உண்டுஅதனில் நவகண்டம்*
*தங்கமக மேருவிந்தத் தரணி நடு நிற்கும்*

*மிக்க வெண்திசைப் பாலரும் வெற்பும் இரு நான்கே*
*தக்க பொன் மேருவின் பாரிசம் தருக்கள் நாலுண்டு அம்மே*

*அத்தருவைச் சூழ்ந்திருக்கும் அதிக தேவர் வனமே*
*எத்திசையும் தீவைச்சுற்றி இருக்கும் ஏழு கடலே*

*தையலே அக் கடல்கள்ஏழும் சகரரால் வந்ததுகாண்*
*மெல் இதுகேள் கடலுக்கு அப்பால் மிகுபொன்னிலம் அம்மே*

நீள்பொன் வேலிக்கு அப்பால் ஆழி நெடுமால் வரை அம்மே
கேழ்கிளர் சக்கர வாளகிரிகள் நிற்கும் அம்மே

தொன்மலையைப் பாதிஇருள் சூழ்ந்திருக்கும் அம்மே
பன்னும் அந்த காரத்துக்கப் பாலுண்டு பொன் கடலே

பாடியசொல் கடல்சூழ் புவி பகரில் ஐம்பத்தாறு
கோடியோ சனைவுண்டு இன்னம் கோதையே கேள் அம்மே

இதமாய் இதன் கீழ் உலகம் ஏழும் சொல்வேன் கேளாய்
அதலம்தன்னைத் தாங்குவது அட்டகெசம் அம்மே

பீடுயர் கெசங்கள் தாங்கும் போராடக மூர்த்தி
ஆடகரைத் தாங்கும் காலாக்கினி ருத்திரன் அம்மே

உருத்திரனைத் தாங்குவது உயர்ந்த சேதான் அம்மே
திருத்தமாய்ச் சேடனைத் தாங்கும் செழிக்கும் கூர்மம் அம்மே

நாடும் கூர்மம் அதில் பதினாலு உலகம் அம்மே
தேடும்அதைத் தாங்குதற்குத் திவ்விய வஸ்து ஒருவன்

அவன்தன் தேகமெங்கும் அகிலாண்டகோடி அம்மே
தவமாயதிலே ஓரண்டந்தனை உரைத்தேன் நானே

மன்னும் திருமலை அழகர் மைத்துனர் எந்நாளும்
இந்நிலத்தில் பணிஅசலத்து ஈசர் நாட்டில் மானே.

## விருத்தம்

52. புனிதமா நாக வெற்பில்
புனிற்று இளம் பிறையை வேய்ந்து
வனிதையோர் பாக மான
வள்ளல்மண் டலப்பெண் மானே
பனி மலர்த் தடம்சூழ் அண்டப்
பண்பெலாம் உரைத்தாய் நன்றாய்
அனுதினம் உகந்த நல்நாட்டு
அதிசயம் உரைசெய் வாயே

## உரைநடை

வாரும் பெண்ணே! தெய்வக்குறமகளே! நீ சொன்ன அண்ட அதிசயம் எல்லாம் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. உங்கள் நாட்டு அதிசயம் சொல்லடி பெண்ணே. சொல்கிறேன் கேளடி அம்மே.

## எங்கள் நாடு

53. *நாட்டில் உள்ள அதிசயங்கள் சொன்னேன் திருச்செங்*
*கோட்டில் வளர் பரமர் மகிழ் வாள் தடம் கண்மானே*

*பொன்னின் மழை பொழிந்தது எங்கள் நாடு - பண்டு*
*பூமலரின் மாரிமிகப் பொழிந்தது எங்கள் நாடு*
*கன்னி உமைக்கு இடம் புகுந்த நாடு - நல்ல*
*கல்லிஇடபம் கடலைதின்ற சொல் உயர்ந்த நாடு*
*ஏடி தனைப் பேசவைத்த நாடு - கண்கள்*
*ஈந்திடும் என்றளவினில் கண்ணீந்தது எங்கள் நாடு*

*ஆடு அரவ கிரி விளங்கு நாடு - பொன்னின்*
*ஆற்றின் வளம் மேவி எங்கும் கீர்த்தி பெற்றநாடு*
*தேவாதி தேவர் தொழும் நாடு - எங்கள்*
*திருமலை மால்அழகர் திருச்செழிக்கும் நாடு*
*நாவலர்கள் தமிழ்மலியும் நாடு - கோதை*
*நாயகர் சேர்பூந்துறைசை நாடு எங்கள் நாடு*

## விருத்தம்

54. *விண்ணவர் பரவும் கோதை*
*அமலர்தம் நாட்டிலே தான்*
*வண்ணமாய் வாழும் தெய்வ*
*மலைக்குற மானே கேளாய்*

*பண்ணுமா வினைகள் தீரப்*
*பரிவதாயத் தேசம் தன்னில்*
*நண்ணி நீராடி வந்த*
*நதிதனை உரைசெய் வாயே*

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே! நீ சொன்ன நாட்டியல் எல்லாங் கேட்டு மெத்தவும் சந்தோஷ மாச்சுது. நீ நீராடி வந்த நதிகள் எல்லாம் சொல்லடி பெண்ணே. ஆனால் சொல்கிறேன் கேளடி அம்மே.

## நதிகள்

55. *திங்கள் நிகர்முக மாதே நான் இந்தத்*
*தேச மீதினில் ஆடி வந்திடும்*
*பொங்கம் ஆகிய நதிதன் பெருமையைப்*
*புகலுவேன் கேளாய்*
*கங்கை யமுனை கோதாவரி சிந்து*
*கன்னவேணியும் கிட்டிண வேணியும்*
*துங்க பத்திரை தாமிர பரணியும்*
*சுவேத நதியும்*
*கொங்குசெறி பொன்னி வைகை நருமதை*
*கூறும் திருச்சிம் பாஆறும் சரசுவதி*
*பங்கையே பொன்முகரி இதுவலால்*
*வழுத்துவேன் கேளாய்*
*பம்பை நதி யொரு வார ணாசியும்*
*பற்குனி சொர்ண பத்திரி கெண்டகை*
*கம்பை திருமணி முத்தா நதி*
*காயா கரையொடு இனமும்*
*அம்பு விதனில் உள்ள தீர்த்தங்கள்*
*ஆடினேன் அதிசயம் அனேகம் காண்*
*உம்பர்புகழ் பணிசயில வரைமி(ன்)னே*
*ஓதினேன் மிகவும்*

## விருத்தம்

56. *சீதளத் தருவி பாயும்*
*சிகரிமா நாக வெற்பில்*
*தாதவிழ் மலர்ப்பூம் கூந்தல்*
*தையலே குறப்பெண் மானே*
*பூதல மீதி லேதான்*
*புண்ணியம் பொருந்தி ஓங்கு*
*மாதலப் பெருமை எல்லாம்*
*வளம்பெற உரைசெய் வாயே*

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே! நீ நீராடி வந்த நதிகளெல்லாம் சொல்லக் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. நீ சேவித்து வந்த மகா புண்ணியத் தலங்கள் எல்லாம் சொல்லடி பெண்ணே. சொல்லுகிறேன் கேளடி அம்மே.

## தலங்கள்

57. *அம்மை கேளாய் நான் அறிந்த தலங்கள் எல்லாம்*
*அன்பாகவே சொல்லுவேனே*
*செம்மையாய்க் கேட்போர்க்கும் சென்மா சா பல்லியமாம்*
*(அம்மை)*

*செல்வம் வளருத் தன்னில் தானே*
*தில்லைச் சிற்றம்பலம் சீகாழி மாயூரம்*
*திருவொற்றி மறைக்காடு நெல்வேலி பூங்கா*
*வளம்பாடி பைஞ்ஞீலி நின்றியூர் வித்துவக் கோடும்*
*திருப்பதி சிவபுரம் திருத்தணி கேதாரம்* *(அம்மை)*

*தொப்ப சயனம் திருவாரூர்*
*அருள் தரும் வைகுந்தம் கயிலை குற்றாலமும்* *(அம்மை)*

அஞ்சைக் களம் ஐயாறு பேரூர்
கருவை காளாத்திரி காவை மோகம்புரி
கன்னியாகுமரி விருத்த காசி
அருணை ராமேசுவரம் ஆவடுதுறை கச்சி (அம்மை)

ஆலவாய் திரு அவினாசி
இந்திரபுரம் தஞ்சை ஏடகம் கோகன்னம்
ஏரகம் குருகை சீரங்கம்
இந்தளம் தென்கோட்டி செய்யாமல் இருஞ்சோலை
வதரிவனம் தலைச் சங்கம் (அம்மை)

இந்தத் தலங்கள் எல்லாம் கண்டு மனமகிழ்ந்து
இயல்பாய்ப் பணிந்து வந்தேனே
விந்தையான அர்த்தநாரீசர் நாட்டில்
மேன்மையாய் விளங்கும்மானே (அம்மை)

## விருத்தம்

58. பனக வெற்(பு) இருந்து வாழும்
பசும் கொடிக் குறப்பெண் ணே நீ
கனம்உறு தலங்கள் எல்லாம்
கவின் பெற உரைத்தாய் கும்பத்
தனஇணை யார்கட்கு எல்லாம்
சாற்றுநின் குறியைக் கேட்டு
மனமகிழ் வாகத் தந்த
வரிசையை உரைசெய் வாயே

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக்குறமகளே நீ சேவித்து வந்த மகாபுண்ணியத் தலங்கள் எல்லாம் சொல்லக் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. நீ முன்னாலே அவரவர்க்குக் குறிசொல்லி வாங்கின வெகுமானம் எல்லாம் சொல்லடி பெண்ணே! ஆனால் சொல்கிறேன் கேளடி அம்மே.

## வெகுமானங்கள்

59. வரிசையுடனே ராமர் வருவார் என்றே சீதைக்குப்
பரிவாய்க் குறியை நன்றாய் பகர்ந்ததினால்
மோகன மாலையும்
வச்சிரக் கொந்தள ஓலையும்
நல்ல கண்டாங்கிச் சேலையும்
மாணிக்க மாத்திரைக் கோலையும்
கொடுத்தாள் காண் (பரிசு)

நலமுடனே விளங்கு நளமகாராசன் வந்துன்
தலைவனாகுவான் என்று தமையந்திக்குச் சொன்னதால்
சுட்டியும் நல்ல பளிங்குப் பெட்டியும்
காலுக்கு வெள்ளி மெட்டியும்
சிங்கனுக்குக் குத்துப் பட்டியும்
கொடுத்தாளே தங்கக் கட்டியும் (பரிசு)

பெருமையாய் அரிச் சந்திரன் பிள்ளையுடன் மகிழ்ந்து
வருவான் என்று நான் சந்திரமதிக்குப் பகர்ந்தத்ால்
இடதாரமும்
மணக்கும் படீரமும்
விளங்கிய முத்தாரமும்
குட நிறைந்த சீரகமும்
தந்தாள் குஞ்சுக்கு ஆகாரமும் (பரிசு)

அருமையுடன் பாஞ்சாலிக்கு ஐவர் புருஷர் என்று
பெருமையுடன் ஓதப் பிரிய மாகவே
பச்சைக் கிள்ளையும்
வேலைக்குச் சின்னப் பிள்ளையும்
சிங்கனுக்கு ஏற்ற கள்ளையும்
கொடுத்தாள் பொரி எள்ளையும்
மகிழ்ந்தேன் மறுதுக்குள்ளையும் (பரிசு)

## விருத்தம்

60\. *சதுர் மறையின் ஒலி விளங்கும் கோதை நாகச்*
*சயில அர்த்தநாரீசர் தமது நாட்டில்*
*மதுமலரின் நறைக்குழலீர் குறப்பெண் மாதே*
*வரிசைகள் நீ பெற்ற எல்லாம் உறைத்தாய் நன்றாய்*

*இதமறிந்து நீயுமிகத் தயவாய் வையத்(து)*
*எந்தன் இருதயத்தில் உன்னியதை நன்றாய்ச்*
*சதிர்உடனே ஆராய்ந்து கண்(டு) அறிந்து*
*தயவாக எந்தன் முன்னே சாற்று வாயே*

## உரைநடை

அகோ வாரும் பெண்ணே! தெய்வக் குறமகளே! நீ குறிசொல்லி வாங்கின வெகுமானம் எல்லாம் கேட்டு மெத்தவும் சந்தோஷம் ஆச்சுது. நான் மனதில் உன்னின காரியம் இன்னது என்று சொல்லடி பெண்ணே! ஆனால் சொல்கிறேன் கேளடி அம்மே.

## மனம் நினைத்தது

61\. *கையைத் தாராய் கையைத்தாராய் கையைத்தாராய்*
*அம்மை மலர்க் கையைத் தாராய் அம்மே*
*வையகத்தோர்க்கு உதவும்நின் செங்கையைத் தாராய் அம்மே*
*இது மச்சரேகை தனரேகை இதலோ தானியரேகை*
*அதிகமாம் பதுமரேகை இது அதிசயம் கண் அம்மே*

## உரைநடை

ஏ அம்மே! உன் கையிலே நல்ல நல்ல அதிசயமான ரேகை இருக்குதடி அம்மே! நீ முன்னாலே கைபார்த்த இடங்களிலே ஆர் ஆர் கையிலே எந்தெந்த ரேகையிருந்தது, அதுவெல்லாம் விபரமாகச் சொல்லடி பெண்ணே. சொல்கிறேன்! கேளடி அம்மே!

## யார்யாரிடம் எந்தெந்த ரேகை?

62. *இந்த மச்சரேகை கண்டேன் இந்திராணி கையில்*
*அந்தமாம் தனரேகை தமையந்திகை யில் கண்டேன்*
*தகமையாம் தானியரேகை பாஞ்சாலி கையில் கண்டேன்*
*செகம் துதிக்கும் பதுமரேகை சீதை கையில் கண்டேன்*

### வசனம்

வாடி குறமகளே இன்ன இன்னார் கையிலே இந்த இந்த ரேகை இருந்தது என்று சொல்லக் கேட்டு மிகவும் சந்தோஷம் ஆச்சுது. இந்த இந்த ரேகைகளுக்குப் பலாபலன் சொல்லடி பெண்ணே சொல்கிறேன் கேளடி அம்மே.

## ரேகையும் பலனும்

63. *இந்த நல்ல மச்சரேகை யாலே - மக்கள்*
*எண்ணும் பதினாறு உள தாய் எடுப்பாய் மேன்மேலே*
*பூவையே தனரேகைச் சாரம் - தன்னால்*
*போதவே வந்து சேரும் பொக்கிஷபண் டாரம்*
*அதிசயமாகும் தானிய ரேகை - சத*
*மாகும் தானிய ராசிகள் சாகோப சாகை*
*பதுமரே கைப்பலன் காணும் - அந்தப்*
*பரமபுருஷன் உந்தன் பதியாக வேணும்*

### வசனம்

அம்மம்மா உன்கை லட்சணத்துக்குமுன் முகலட்சணத்துக்கு முன் வடிவுக்கும் பார்த்தால் அந்தப் பரஞ்ஜோதி ரூபமாயிருக்கின்ற தேவாதி தேவனே புருஷனாக வேணுமடி அம்மே. வாடி பெண்ணே குறமகளே! என் கையிலே இருக்கிற ரேகைகளுக்குப் பலாபலன் சொல்லக் கேட்டு மிகுதியும் சந்தோஷமாச்சுது. நான் மனதில் உன்னிய காரியம் இன்னதென்று சொல்லடி பெண்ணே! வாடி அம்மே.

அந்தப் படியே சொல்லுகிறேன். நீ முழுகிக் குளித்து முத்துவண்ணச் சேலை உடுத்து நேர்முகமாய் வந்து நில்லடி பெண்ணே. நீ சொன்ன பிரகாரமே வந்திருக்கிறேன். நான் நினைத்த காரியம் நிலவரமாய் சொல்லடி பெண்ணே சொல்கிறேன் கேளடி அம்மே.

## குறி சொல்லுகிறேன்

64. *குறி சொல்லுகிறேன் கேளீர் - முத்துக்*
*கொண்டு வாடி நிறைநாழி*
*கருத்துடனே பச்சைப் புகுழு - கூட்டிக்*
*களபத்தினால் நிலம் மெழுகு*
*பரிவுடனே கோலமிட்டு - நல்ல*
*பச்சிலைத் தோரணம் கட்டு*

*மேதினி யோர்க் கெல்லாம் மெய்ப்பாய் - சித்தி*
*விக்கினே சுவரனை வைப்பாய்*
*நந்தா மணிவிளக்கு ஏற்று - நல்ல*
*நறுமலர் பத்திரம் சாத்து*

*அறுகுகந்தம் அட்சதை சூடு - மெத்த*
*அன்புடனே கொண்டாடு*
*வரிசை உடனே சாம்பிராணி - கொண்டு*
*வாடி அம்மே இந்திராணி*

*குலதெய்வம் தனைச் சாட்டி - நீ*
*கும்பிடடி கை கூட்டி*
*அதலோ பாட்டு சேலைக்காரி - வந்து*
*அமட்டு ராளடி மெத்த மீறி*
*ஒன்றிக் கருப்பன் வந்து நின்றான் - எனக்கு*
*உதவுவாய் பூசை நீ என்றான்*
*வலத்தினில் சொல்லுது பல்லி - மெத்த*
*வண்மைகேள் கோமள வல்லி*

## வசனம்

அம்மம்மா நீநினைத்த காரியம் சொல்லும் வேளையில் உன்குல தெய்வ மெல்லாம் வந்து கூத்தாடும். உடம்படிக்கை சொல்லி நீ நினைத்த காரியம் சொல்லுகிறேன். என் குலதெய்வங்களை வேண்டிக் கொள்கிறேன். இப்போது விக்கினேசுவரனுக்குச் சகல உபசாரமும் காணிக்கை நிறைநாழி முத்தும் கொண்டு வாடி அம்மே. அந்தப் படியே கொண்டு வந்திருக்கிறேன் அம்மே.

## அகவல்

65. *திருமலை வாசா ஸ்ரீ வேங்கடேசா*
*அருள் கயி லாசா அர்த்தநா ரீசா*
*மதுரப் பிரசங்கா மாதேச லிங்கா*
*சங்கரி கௌரி சருவ தயாபரி*
*கொங்கலர் வேணி குமரிகல் யாணி*
*ஆதிகா ரணியே அன்னப் பூரணியே*
*பங்கய லோசனி பத்மசிங் காசனி*
*சங்கரி நாரி சத்தி ஓங்காரி*
*பருப்பதம் மெல்லி பரிமள வல்லி*
*அருள் அருளாயே அழகிய தாயே*
*கஞ்சி காமாட்சி கதம்ப மீனாட்சி*
*ஒப்பிலா உருவே உயர் மலர்த் திருவே*
*அருள்மலர்ச் செங்கை அலர்மேலு மங்கை*
*கலச நல்பாணி தவளமெய் வாணி*
*வீரமா காளி விமலிவே தாளி*
*சத்திசா முண்டி சகலவுத் தண்டி*
*பகர்சிற் றிடைச்சி பட்டை தலைச்சி*
*மகிமைக்கு அதிபதி மலையாள பகவதி*
*கூறும் வரத்தி கொல்லா புரத்தி*
*கண்ணனூர் மாரி கருது காட்டேரி*
*மானீன்ற கண்ணே வரிவிழிப் பெண்ணே*

*மரகத மயிலே பாவளர் குயிலே*
*நன்குலத்து அரசே நான்மறைச் சிரசே*
*அந்தரி நிறத்தி அன்புள குறத்தி*
*வாக்கருள் தாயகி வள்ளி நாயகி*

## உரைநடை

ஓ ஓ சகலமான மகா தெய்வங்களே! என் சொல்லுக்கிரங்கி ஒருமுகமாக வந்து என் குறக்கூடை நிறைந்து மாத்திரைக் கோல் வழியாய் வாக்கில் உதித்து தெய்வ மோகனாங்கிப் பெண் மனதிலே சிந்தித்திருக்கின்ற காரியம் இன்னதென்று கைக் கருணையாகச் சொல்லும்படிக்கு என்முன் வந்து நிற்கவே வாடி தெய்வ மோகினிப் பெண்ணே உன் மனதிலே நினைத்த காரியம் என் கையிலே சிக்கிக் கொண்டதடி அம்மே. அப்படியே சரி இன்னும் நன்று ஆராய்ந்து பார்த்து உற்றது சொல்லடி பெண்ணே.

*66. உற்றது சொல்லுகிறேன் - கேளாயம்மே*
*உற்றது சொல்லுகிறேன்*
*முத்துச் சுற்றிப் பார்த்துப்*
*பற்றிப் பார்த்து உன் மனதில்*
*சொன்ன குறிகள் எல்லாம் - உன் மனதில்*
*சோதனை பார்த்துக் கொள்வாய்*
*பொன்னல்ல புவியல்ல - சந்தோஷ காரியம்*
*போலவே தோணுது அம்மே.*

## உரைநடை

அம்மம்மா நீ நினைத்த காரியம் பொன்னல்ல புவியல்ல ஆடையாபரணமல்ல. வெகு சந்தோஷ காரியமாய்த் தோணுதுடி அம்மே. வாடி பெண்ணே குறமகளே! இந்தச் சந்தோஷ காரியம் ஆணாலே வருகிற காரியமோ, பெண்ணாலே வருகிற காரியமோ நிகமாய்ப் பார்த்து நலமாய்ச் சொல்லடி பெண்ணே.

67. நலம்பெறச் சொல்லுகிறேன் - கேளாய் அம்மே
நலம்பெறச் சொல்லுகிறேன்
நிலவரமாய் நவமணியில் - ஒன்றதனை
நினைத்துக் கொள்வாய் அம்மே
வாரும் பெண்ணே! குறமகளே நான் நினைத்த
மணி இன்னதென்று சொல்லடி பெண்ணே.

## நினைத்தமணி

68. நேராய் நீ நினைத்த மணி சிரமென்று
நிற்ப பேன்நான் நிலவரமாய்
பாரெலாம் பணிகின்ற சொவுசு
முறுக்கு மீசைக்காரன் போலவே தோணுது

அகமகிழ்ந்து நீயெண்ணிய காரியம் பார்த்தால்
வெகு விந்தையாய்க் காணுது
மகராசி நீ ஒரு தேவபுருஷன் மீதில்
மயல் கொண்டாய் எனப் பூணுது

## உரைநடை

அம்மம்மா நீ நினைத்த காரியம் பார்த்தால் ஒரு மகாபுருஷன் மீதில் மயல் கொண்டாய் போல் இருக்குதடி அம்மே - வாடி பெண்ணே குறமகளே நானொரு மகாபுருஷன் மீதில் மயல் கொண்டாற்போல் இருக்குதென்று சொன்னது நிலவரமே சரி. இன்னம் நன்றாகப் பார்த்துச் சோதனையாகச் சொல்லடி பெண்ணே.

## புதுமையாய்ச் சொல்

69. சோனையாக நான் சொல்லமாட்டேன் என்றோ
மாதே நீ எனை மெத்த மயக்குகிறாய் இந்தப்
பூதலத்தினில் நல்ல புதுமையைய்ச்
சொன்ன மாதர்கள் எல்லோரும் மனமெச்ச
அடி கோதையே - வெகு
செம் பொன் கொடுப்பாயோ அம்மே.

## உரைநடை

வாரும் பெண்ணே குறமகளே! சோதனையாகச் சொன்னால் வெகுசெம்பொன் கொடுக்கச் சொல்லி அல்லோ கேட்கிறாய். வேண்டுவதெல்லாங் கொடுக்கிறேன். நான் மயல் கொண்ட மகா புருஷன் இன்னவன் என்று சொல்லடி பெண்ணே.

## பெண் சொன்ன குறி

70. *இன்னவன் என்று பார்த்து என்னைச் சொல் என்கிறாய்*
*பொன்னே அப்படி சொல்லப் போகுமோ - இப்ப*
*இன்னவன் என்று நான் சொன்னதால் - மெத்தத்*
*தன்மையாய் நிதி தருவையோ - ஆனால்*
*இன்ன ஒன்பதில் ஒன்றை எண்ணிக் கேள் அம்மே.*

## உரைநடை

வாரும் பெண்ணே குறமகளே நான் எண்ணிது இன்னதென்று சொல்லடி பெண்ணே.

### எண்ணியது

71. *நகைமுகமாதே நீ எண்ணினது அஞ்சென்று*
*நவிலுவேன் நான் மெத்த விபரமாய் - இப்பச்*
*சுகமாய் வியாழம் வந்து தோன்றினான் - நீ*
*அகமகிழ்ந்து கேளாய் அடி அம்மே - இந்தச்*
*சகல லோகத்துக்கும் சுவாமி காண் அம்மே.*

## உரைநடை

அந்த மகாபுருஷன் சகல லோகத்துக்கும் சுவாமி என்று சொன்னது சரியே. பிரம்மா, விஷ்ணு மகாதேவர் இவர்கள் மூன்று பேரிலே ஆரென்று அறிகிறதுக்கு இன்னார் என்று அடையாளம் சொல்லடி பெண்ணே.

72. *அடையாளம் சொல்லென்று அன்புடன் கேட்கிறாய்*
*அடையாளமும் சொல்லப் படுமோ சொல் - நான்*
*திடமுடன் அடையாளம் செப்பினால் - ஒரு*
*குடப்பணங் கையினில் கொடுப்பையோ - அப்படி*
*பன்னிரண்டில் ஒன்றைப் பரிந்து கேள் அம்மே*

## உரைநடை

வாடி பெண்ணே பனிரண்டில் ஒன்றை நினைத்துக் கேளென்று சொன்னது சரியே. நான் நினைத்தது. இன்னதென்று சொல்லடி பெண்ணே.

## மிதுனம்

73. *மாதே நீ நினைத்தது மனத்தில் கண்டுகொண்டேன்*
*சோதனையாய் இப்பச் சொல்லுவேன்*
*நீதமாய் மூன்றென்று நினைத்தால் - அந்தச்*
*சோதிடத்தில் மிதுனந் தோணுது அடி*
*கோதை இரண்டுடல் ஒன்றாய்க் கூடினோர் அம்மே*

## உரைநடை

வாடி பெண்ணே அடையாளம் இரண்டுடல் ஒன்றாய்க் கூடினோர் என்று சொன்னது சரியே. அவருடைய பேரைத் தெரிய விளக்கமாய்ச் சொல்லடி பெண்ணே.

## பேர்

74. *நெறியாக நீ பேரைச் சொல்லென்று நிற்கிறாய்*
*குறியில் இப்படி சொல்லக் கூடுமோ - நல்ல*
*விருதுடன் நான் பேரை விளம்பினால் - அடி*
*அரிசையே சாம்பிராச்சியம் தருவையோ - ஆனால்*
*இருபத் தேழினில் ஒன்றை எண்ணிக் கேள் அம்மே*

## உரைநடை

வாடி பெண்ணே! இருபத்தேழில் நான் நினைத்தது இன்னதென்று சொல்லடி பெண்ணே.

75. *சீருடன் சிந்தித்த நாளைத் தெரிந்து கொண்டேன்*
*பாரில் எப்படிப் பகருவாருண்டோ - மெத்தச்*
*சாரமாங்க கார்த்திகை தானது கேளாய்*
*பூருவம் நீ செய்த புண்ணியம் - எங்கும்*
*பேராம் செங்கோட்டு அர்த்த நாரீசர் அம்மே.*

## சேரும் நாள்

76. *வந்து சேர்வது இன்ன நாள்என்று வசனிப்பேன்*
*சிந்தித்தபடி என்பால் செய்வையோ ஆனால்*
*உந்தன் மெய்யினில் ஒன்றைத் தொட்டிடு*
*நீ கொங்கை அந்தமாய்த் தொட்டதின் பலனைக் கேள் என்றும்*
*சிந்தையாய் நாள் மூன்றில் சேருவார் அம்மே*
*சோதனையாகச் சொல்லுவேன் அம்மே.*

## விருத்தம்

77. *இங்கு இதெலாம் வினவி மகிழ்ந்திருக்கும் வேளை*
*ஏந்திழையாம் பாங்கி செங்கோட்டு ஈசர்தோளில்*
*பொங்கமுடன் அணியிதழ் மாலை வாங்கிப்*
*பூவை தெய்வ மோகினிகை கொடுக்க வாங்கிக்*
*கொங்கையின் மேல் அரவணைத்து இருகண் ஒற்றிக்*
*கோகனக முகமலர்ந்து குறமான் என்னும்*
*மங்கை உளம் களித்திடவே அணிகள் வேண்டும்*
*வரிசை அனேகங்கள் மேன்மேல் வழங்கினாளே.*

78. பாக்கியம் பெற்றேனே சிலக்கியமாய் நல்ல
பாக்கியம் பெற்றேனே.
பாக்கியம் பெற்றேனே வாக்குஇயல் பாய் அருள்
தேக்கிய தெய்வ மின்னாட்கு இனிக் குறிசொல்லி
பாக்கியம் பெற்றேனே

சரிகைக் கம்பிச் சேலை - குழையில்
ரத்தினத் தங்ககிரண ஓலை
சரிகைக் கம்பிச் சேலை
தங்கக் கிரண ஓலை

வரிசைச் சரங்கள் வேலை
வண்ண முத்து மாலை
பச்சை மரகதப் பாடக மெய்ப்புடன்
வச்சிரம் அழுத்திய உச்சிதக் கொப்புடன் (பாக்கியம்)

கொங்கைக் கிசைந்த கச்சு - சொருகுங்
குழல் கொண்டை முத்துக்குச்சு
கொங்கைக் கிசைந்த கச்சு
கொண்டை முத்துக்குச்சு

தங்கப் பணி அச்சு
தரணியெல்லாம் மெச்சும்
கறவைப் பசுக்களெண்ணத் தொலையாது பேரான
திறமையும் பளிக்கையூர் பெறுமெனச் சீரான (பாக்கியம்)

செங்கதிர் ஒளிஞாணும் - விலை சொல் ஒண்ணாச்
சிற்றிடை அரை ஞாணும்
செங்கதிர் ஒளி நாணும் சிற்றிடை அரை ஞாணும்
துங்க நுதலில் தாணும் சுட்டி மதிபோல் காணும்
தாமரைக் கையினில் வளைதனில் நிழலாட
ஆமெனப் பலபணி நேமமாய் நீட (பாக்கியம்)

*வாகாம் களபம் பூசி - தந்த நீதி*
*மகமேரு எனும் ராசி*
*வாகாம் களபம் பூசி*
*மகமேரு எனும் ராசி*
*ஆகும் கிளி போல் பேசி*
*அன்பாம் விசுவாசி*
*நாககிரி அர்த்த நாரீசர்க்கு அன்பான*
*பாகுமொழி தெய்வமோகினி தயவாகப்* (பாக்கியம்)

## விருத்தம்

79. *அளிக்குல நறவு மாந்தி*
*அரவிந்த மலரின் மேவும்*
*எழில் தடம் சூழ்செங் குன்றூர்*
*இறைவனார் நாட்டிலே தான்*
*மொழிப்பசு கிளிக்கு றப்பெண்*
*மோகமாய் எங்கும் தேடிச்*
*சுழிக்கையும் கையில் ஏந்தித்*
*தோன்றினாள் குளுவன் தானே*

## உரைநடை

அது எப்படியென்றால் பக்த சனப்பிரியர் பார்ப்பதி பிராண நாயகராகிய அர்த்தநாரீசுவர மகாதேவர் திருநாட்டில் தன் காதலியாக தெய்வக் குறத்தி தேசங்களிலே கணி சொல்லப் போயிருக்கிறவள் இந்நேர மட்டும் தன தாபரம் வந்து சேராத படியினாலே அதிக விரகம் கொண்டு மனம் தள்ளாடிக் கண்கள் சிவந்து கருகி நடந்து கையிலே சில்லாக் கோலும் ஏந்திக் கொண்டு கள்ளுக் குடித்த லாகிரியாலே மயக்கமுந்தி அக்கமுகமாய் சிங்கி எங்கே எங்கே என்று தேடிக்கொண்டு சிங்கன் வருகிற மார்க்கம்.

## சிங்கன்

80. *சிங்கி எங்கே எங்கே என்று*
*தேடியும் ஓடியும் வாடியுமே*
*துங்கச் சில்லாக் கோலும் ஏந்தித்*
*தோதாகச் சிங்கனும் தோன்றினனே*

கறுகறுத்து உடலும் விழிசிவப்பும்
கனபலகறை கொக்கு இறகுஅணிந்து
குறிஉரை குறத்திமேல் ஆசையதாய் - மெள்ளக்
குறப்பயல் சிங்கனும் தோன்றினனே

சாரயங்களும் கள்ளு நிரம்பத்
தாக்கு மயக்கத்தில் அகத்திலே
நேராகத் தடிமீசை முறுக்கிய
நெறிப்புடன் குளுவனுந் தோன்றினனே

சிறிய குதிரை பரியம் கொடுத்த
சிங்கியை எங்கென்று கங்கணமாய்
நெறியாய்க் கூடை முறங்கட்டத் துணிந்த
நேர்முக் குறவனும் தோன்றினனே

நாகாசலமிசை தனில் வளர்த்த
நாரீசுரர்தன் திருநாட்டில்
வாகாக குறவஞ்சி மேல் மிஞ்சிய
மய்யலாய்ச் சிங்கனுந் தோன்றினனே

## விருத்தம்

81. வேதநன் முனிவர் போற்றும்
விமலர் செங்கோட்டி ஈசர்
கோதைமா நகரில் மல்கும்
குழகரைத் தன்னி லேதான்
சாதி பேதங்க ளான
தனிதனிப் பட்சிக்கு ஆகக்
காதலாய்க் குளுவன் வந்து
கண்ணியைத் திரிக்கின்றானே

## பறவைகளைப் பிடித்தல்

82. கண்ணி திரிக்கிறானே
கண்ணு இரண்டும் கோவைக் கனிபோலே
கள்ளுக் குடித்து லாகிரியாலே
விண்ணோர் புகழ்தென் கோதை வயற்குள்
வேடிக்கையாய்ச் சிங்கன் பறவைகள் பிடிக்க (கண்ணி)

முறுக்கு மீசையும் கிறுகிறுப்பும்
மொடியுடனே காலதனை நீட்டி
சுறுக்காகத் தென்கோதை வயற்குள்
சொக்கிச் சொக்கிப் பறவைகள் பிடிக்கவே (கண்ணி)

## விருத்தம்

83. கருதி ஆகமங்கள் போற்றும்
துய்ய செங்கோட்டு ஈசர்
அருள்வளர் நாட்டில் சிங்கன்
அணங்கினைத் தேடி வாடி
வருகின்ற குளுவன் கோதை
வயலினில் பறவை சிக்கக்
கருதியே திருத்தி நல்ல
கண்ணிகள் குத்தி னானே

## கண்ணி குத்துகல்

84. எங்கும் நிறைந்த அர்த்த நாரீசருக்கு
இன்பமாம் தென்கோதை வயற்குள்ளே
கங்கணம் கட்டியே பறவை பிடிக்கக்
கருத்தாய்க் கண்ணியைக் குத்தினனே

கொக்குக் கவுதாரி நாரைகளும்
கூடி விளையாடும் வயற்குள்ளே
பிக்குப்பிக் காகவே சுத்திச் சுத்திப் பார்த்துப்
பேசாமல் கண்ணியைக் குத்தினனே

சிவந்த கண்ணும் இறுமாப்பும்
தீர்க்கமாய்ப் பார்த்துப் பதிக்குக்
கவிழ்ந்து மகிழ்ந்து பறவை பிடிக்கக்
கலந்து கண்ணியைக் குத்தினனே.

## விருத்தம்

85. செந்தமிழ்க் கவிஞர் போற்றும்
சிறந்த செங்கோட்டில் வாழும்
இந்தணி அர்த்த நாரீ
ஈசுரர் விளங்கும் நாட்டில்
கொந்தவிழ் குறப் பெண் மோகம்
கொண்டிடும் குழுவன் தன்முன்
வந்திடும் பறவை தன்னை
மகிழ்ந்து கண்டுஉரை செய்வாளே

86. கூடுறுதய்யே - பறவைகள்
கூடுறுதய்யே
நாடு புகழ்த்திருச் செங்கோடை அம்பதி
நாரீசுரர் அர்த்தர்தன் ஏரிவயற்குள்ளே
பச்சைப் புறாவுடன் இச்சைக் காடை மயில்
சிக்கிலி கொக்கித மிச்ச நன்னாரையும்
வச்சிர நிறக்கிளி அச்சமிலாப் பேடை
எச்சஉள்ளான் மனமெச்ச மடையானும்
மொச்சும் கவுதாரி உச்சிதக் காக்கைகள்
கொச்சிச் சிவல்சிட்டு நாரைச் சொக்காணாங்கோழி
கச்சுக் கச்சென்று ஒரு மிச்சு மிச்சுக் கொண்டு
பட்சியினம் ஒரு மிச்ச மிச்சமாகக் (கூடுறு)

திக்கெட்டும் நந்தித் துதிக்கும் பதத்தினர்
முக்கட் பரத்தர் கடுக்கைச் சடைக்
கொற்ற சொற்கர்த்தர் வேதம் உரைக்கும்
பொருட்டு யாம் இக்கு
அர்த்த சருக் கொற்றக்
கோதை வயற்குள் கரைக்கும் கயல் கொத்தி

நற்றிப் பின்விக்கிக் கழுத்தின் தொடர்ச்சிக்கி
எக்கிச் சுருக்கி இணைகட் பிதுக்கி
நெருக்கி தகக்கி ததக்கிக் கொக் கொக் கென்னவே
கொக் கொக் கென்னவே - (கூடுறு)

கெம்பாற அடய்யே பொறு பொறு
கெம்பரா டய்யே
அம்பிகை பங்கர்தம் கோதை வயற்குள்ளே
கெம்பராய்க் கண்ணியில் பட்சி
கும்பாய்ச்சிக்கும் வேளை - கெம்பரா (கூடுறு)

## சிக்கினா

87. சிக்கிச் சுடய்யே - பறவைகள்
சிக்கிச்சு டய்யே
தக்க புகழ் கோதை முக்கட் பராபரன்
மிக்க வயற்குள்ளே முக்கியமாய்க் கண்ணியிலே (சிக்கி)

## விருத்தம்

88. அண்ணல் சங்கரனார் கோதை
அர்த்த நாரீசர் நாட்டில்
கண்ணியில் பறவை எல்லாம்
கருத்துடன் பிடித்தேன் அய்யே
நண்ணிவே கறி சமைத்து
நல்கவும் ஒருவர் காணேன்
வண்ணமாம் குறத்தி எங்கே
வண்டுகாள் உரை செய் வீரே

89. மலரில் தேனருந்தும் வண்டுகாள் - சிங்கி
வரவும் காணேன் சொல்வீர் வண்டுகாள்
நல்இசை பாடிய வண்டுகாள் - சிங்கி
நாட்டம் வேறானாளோ வண்டுகாள்

மருவும் சிங்கி தனை வண்டுகாள் - கூட்டி
வருவாருங் காணேன் வண்டுகாள்
இருபது குதிரையை வண்டுகாள் - பணையம்
ஏற்கவே ஈய்ந்தேனே வண்டுகாள்

தனம் மெத்த உண்டு வண்டுகாள் - சிங்கி
தான் இருப்பிடம் சொல்வீர் வண்டுகாள்
நன்மை வளரும் எங்கள் கோதையூர் - அர்த்த
நாரீசர் நாட்டினில் வண்டுகாள்

90. சொல்லடா ஏது சிங்கா - நீயுமிந்தச்
சோலைதனில் இசைமயில் வண்டதனை நோக்கி
நல்ல நல்ல வார்ர்த்தைகளைச் சொல்வல் உற்றாய்
நாயகியாம் சிங்கி செய்யும் விரகத்தாலே
அல்லனைய குழல்குறத்தி மோகத்தால்
அணைந்ததுவும் நீயிருந்த அன்புமிந்த
வல்லபையாம் சபைஅறிய நன்று நன்றாய்
வண்மையுடனே தயவாய் வசனிப்பாயே

91. குணங்கள் சொல்வேனே - சிங்கி செய்யும்
குணங்கள் சொல்வேனே
அணங்கு தான்அவள் வணங்கி ஆசையில்
இணங்கியே நல்ல மணம் குலாவிய

கொக்குக் கறிதின்ற எச்சிலைத் தின்னெத் தருவாள் நன்றாய்ச்
சிக்கவைத்துக் கொள்ள வேளை என்றே-முலை வருவாள்
சொக்கி விழுவாள்கை மழுவாளரைக்
கைதொழுவாள் சொற்கள் வழுவாள் (குணங்கள்)

தேன் எனப் பூனைக்கதியைச் சமைத்திடும் சமத்தி ஒரு
பானை சாராயம் குடிப்பேன் பாரென்று கையமத்தி
வானிலும் எட்டிக் காணம் பாடி
தான்மயல் பூட்டி மானி சீமாட்டி (குணங்கள்)

கோதைப் பதி அர்த்த நாரீசர் நாட்டினில் மின்னாள் வெகு
காதலாய் நன்றாய்க் கலவித் தொழில் மெத்தச் சொன்னாள்
மாதர்க்கு ஒயிலாள் ஓதப்பயிலாள்
நீதிக்குயலாள் சாதிக் குயிலாள் (குணங்கள்)

## விருத்தம்

92. நிறையுள சபையோர் முன்னே
நெறிப்புடன் குளுவன் வந்து
திறமையாய் மையல் எல்லாம்
திருந்தவே உரைக்கும் வேளை
நறைகமழ் கோதை ஈசர்
நாட்டில் மோகினிக்கு நன்றாய்க்
குறிசொல்லி வரிசை பெற்ற
குறத்தியும் வந்துற்றாளே

## சிங்கியைக் கண்ட சிங்கன்

93. ஆசைச் சிங்கியைக் கண்டேனே - எந்தன்
நேசத் துயரெலாம் விண்டேனே
துணைமுலை மீதினில் அணையவும் நிமிஷம்
இணைபிரியாமலே புணரவுமே (ஆசை)

கூறிய கொங்கையில் ஊறிய பால் உண்டு
தேறவுமே மயல் ஆறவுமே (ஆசை)

நீரணி செஞ்சடையார் இயல்பாய் வளர்
சீருள செங்குன்றூரினிலே (ஆசை)

## சிங்கன் சிங்கி உரையாடல்

94. இத்தனை நாளாய் நீதான் எங்கெங்கே போய் வந்தாய்
என் மனதறியவே சொல்லடி சிங்கி
அர்த்த நாரீசுரர் தெய்வமோ கனாங்கிக்கு
அன்பாகவே குறிசொல்லி வந்தேன் சிங்கா

எங்கே தனிவழி போனாலும் பெண் பிறந்தார்க்கு
ஏச்சாகும் என்பதறியாயோ சிங்கி
வெங்கனல் ஆனவட வாக்கினி தன்னைப் புழு
விரும்பிப் பற்றுமோ நீ விளம்படா சிங்கா
கொண்டவன் தனைவிட்டுக் கண்டவன் தன்னுடனே
கூடித் திரிந்தாயோ தான் கூறடி சிங்கி
துண்ட வார்த்தைகள் பேசி ஏழைகண்டே மூக்குச்
சொறிய உனக்கு ஏற்குமோ சொல்லடா சிங்கா
உதட்டு வார்த்தைகளாக எதிர்த்தும் என்முன் பேச
உனக்குத் தகுமோ நன்றாய் ஓதடிசிங்கி
பதட்டம் ஏதடி என்று அதட்டுறாய் உனக்கு நான்
படித்துக் கொடுத்த வித்தை தான் அல்லோ சிங்கா
ஒன்றுக்குப் பத்து வார்த்தை ஓதத் துணிந்து கொண்டாய்
உனக்குக் கற்பித்தவர் வேறு உண்டோடி சிங்கி
நன்று நன்றாச்சு மீனின் குஞ்சுக்கு நீச்சு வகை
நாட்டிப் பழக்க நாட்டில் உண்டோடா சிங்கா

முடித்த கொண்டையின் மேலே தேளின் கொடுக்குப் போலே
முளையாகத் தொங்கின தென்னடி சிங்கி
நடிக்கும் பத்தர் அர்த்த நாரீசர் மோகனாங்கி
நல்கும் சவுரிக்குப்பி தானடா சிங்கா

தூதிளம் கனிதன்னை மார்பினில் கோத்துக் கொண்டு
தோதகம் செய்து வந்த தென்னடி சிங்கி
மாது பங்காளர் தெய்வ மோகினிதான் தந்த
மாணிக்க மாலை இது தானடா சிங்கா

வேலையில்லாமல் வெங்கக்கல்லை நீ கோத்தணிந்த
விந்தை எனக்கு விளம்பாயடி சிங்கி
ஞாலம் புகழும் கோதை நாயகர் மோகனாங்கி
நன்றாய்க் கொடுத்த முத்துமாலை தான் சிங்கா

மார்பின்மீது சிவந்த மரப்பட்டையைக் கட்டின
மார்க்கம்தனைத் தெரியச் சொல்லடி சிங்கி
நாரிபங்கர்தன் மோகனாங்கி என்குறி மெச்சி
நல்கு முலைக்கச்சு இதுதானடா சிங்கா

சின்னச்சிட்டு ரத்தம் வாயும் உதடும் மெத்தச்
சிவப்பாய் இருக்கும் வகை ஏதடி சிங்கி
பன்னாககிரி ஈசர் தெய்வ மோகினி தந்த
பாக்கு வெற்றிலை தின்ற பண்புகாண் சிங்கா

கட்டி அணைத்துக் கொண்டு முத்துமுத்தாடவே
காதல் பெரிது கிட்டவாடி நீ சிங்கி
மட்டுத் தப்பிச் சபையில் வார்த்தை பகர்வது இந்த
மாநிலம் தன்னில் யார்க்கும் ஏற்குமோ சிங்கா
என்ன விதமானாலும் உன்னைச் சி(ன்)னப் பொழுது
இனி விட்டிருக்க முடியாதடி சிங்கி
மன்னு மதனும் ரதியாக நீடுழி காலம்
மருவிக் கலவி செய்து வாழ்வோம் காண் சிங்கா

நாக கிரியில் அர்த்தநாரீசர் தம்மைப் புகழ்ந்தாடிக் கொண்டே
நன்றாய் வாழ்த்தடி சிங்கி
யாகம் மகிழ்ந்து திருமலையில் அழகர் பதம்
அன்பாகவே துதி செய்யடா சிங்கா

95. சோபனமே சோபனமே சோபனமே - நித்திய சோபனமே
மரபானபணி கிரிமங்கை பங்காளருக்கு
தூய சுந்தரற்கு இனிய தூதருக்குச்
சொல்ல அரிதான மலர்ப் பாதருக்கு
ஆயர் மனையில் நவநீதம் பருகமக
மாய மைத்துனர் விநோதருக்கு - (சோபனமே)

மேலாம் பத சாயுச்சிய வீடுக்கு
விளங்கும் எழுகரை நன்னாடருக்கு
ஆலம் அமுதெனக் கொண்ட அமரருக்கு
அஞ்சலனு கூலரெனும் திருச்செங் கோடருக்கு
தேசு லாவிய கொங்கு தேசருக்கு
திவ்வியமாம் பணிகிரி வாசருக்கு
வாசவன் சுரர் கமலாசனன் போற்று நட
ராசரெனும் அர்த்தநாரீசருக்கு (சோபனமே)

# பாட்டு முதல் குறிப்பு அகராதி
## (எண் பாட்டு எண்)


| | | |
|---|---|---|
| 1. | அடையாளம் சொல் | 72 |
| 2. | அண்ணல் | 88 |
| 3. | அண்டர் புகழ் | 2 |
| 4. | அதிகமாம் | 49 |
| 5. | அம்மை கேளாய் | 57 |
| 6. | அளிக்குல | 79 |
| 7. | அரகரதேவா | 6 |
| 8. | அருள் திரு | 26 |
| 9. | ஆகமுடன் | 51 |
| 10. | ஆசைகொண்டதை | 35 |
| 11. | ஆசைச் | 93 |
| 12. | ஆசையால் | 22 |
| 13. | ஆரணன் | 11 |
| 14. | இங்கு இதலாம் | 77 |
| 15. | இத்தனை நாளாய் | 94 |
| 16. | இத்தலத்தில் | 45 |
| 17. | இந்த நல்ல | 63 |
| 18. | இந்த மச்சரேகை | 62 |
| 19. | இன்னவன் | 70 |
| 20. | உற்றது சொல்கிறேன் | 66 |
| 21. | எங்கும் நிறைந்த | 84 |
| 22. | ஏந்திழையோர் | 27 |
| 23. | கங்காதரன் | 7 |
| 24. | கங்காதரா | 10 |
| 25. | கமல மலர் | 28 |
| 26. | கரித்தரக்கு | 8 |
| 27. | கற்ற நாவலர் | 16 |
| 28. | கன்னி | 82 |
| 29. | கனக மலை | 47 |
| 30. | குணங்கள் | 91 |
| 31. | குறவஞ்சி | 39 |

| | | |
|---|---|---|
| 32. | குறி சொல்லுகிறேன் | 64 |
| 33. | கூடுதையே | 86 |
| 34. | கையிலையங்கிரி | 3 |
| 35. | கையைத் தாராய் | 61 |
| 36. | கொங்கில் | 40 |
| 37. | சதுர் மறையின் | 60 |
| 38. | சாதிமரபின் | 43 |
| 39. | சிக்கி | 87 |
| 40. | சிங்கி எங்கே | 80 |
| 41. | சித்தர்கள் | 37 |
| 42. | சித்தர்கள் பரவு | 30 |
| 43. | சிலை நுதல் | 48 |
| 44. | சீதளத் தருவி | 56 |
| 45. | சீருடன் | 75 |
| 46. | சுருதி | 83 |
| 47. | செஞ்தமிழ்க் கவிஞர் | 85 |
| 48. | சொல்லடா | 90 |
| 49. | சோபனமே | 95 |
| 50. | சோதனையாக | 69 |
| 51. | திங்கள் நிகர் | 55 |
| 52. | திருமகள் | 41 |
| 53. | திருமலை | 65 |
| 54. | திருவட்ட | 14 |
| 55. | திருவருள் | 1 |
| 56. | தெய்வ | 19 |
| 57. | தெய்வ நன் | 17 |
| 58. | தெள்ளுதிரை | 24 |
| 59. | நதிதனை | 20 |
| 60. | நலம் பெற | 67 |
| 61. | நகை முகை மாதே | 71 |
| 62. | நற்றமிழோர்கள் | 50 |
| 63. | நாட்டில் உள்ள | 53 |
| 64. | நிறையுள | 92 |
| 65. | நீர் கொண்ட | 4 |

| | | |
|---|---|---|
| 66. | நெறியாக | 74 |
| 67. | நேராய் நீ | 68 |
| 68. | பகை வெற்பு | 58 |
| 69. | பவனி | 15 |
| 70. | பாக்கியம் பெற்றேனே | 78 |
| 71. | பாரில் | 33 |
| 72. | பாரினில் | 32 |
| 73. | புனிதமா | 52 |
| 74. | பொலன் கொடி | 34 |
| 75. | மகிமை சேர் | 9 |
| 76. | மலரில் | 89 |
| 77. | மலைய வெற்பிலே | 29 |
| 78. | மாதே நீ | 73 |
| 79. | முந்தை | 44 |
| 80. | மைத்துனர் | 12 |
| 81. | மையல் பொருக்க | 31 |
| 82. | வஞ்சி வந்தாள் | 38 |
| 83. | வந்து சேர்வது | 76 |
| 84. | வரிசையுடனே | 59 |
| 85. | வளர் தெய்வ | 21 |
| 86. | வாகா | 18 |
| 87. | வாரணம் | 42 |
| 88. | வான்மதிக் | 46 |
| 89. | வானின்மதி | 36 |
| 90. | விண்ணவர் | 13 |
| 91. | விண்ணவர் பரவும் | 54 |
| 92. | விந்தை மாறன் | 25 |
| 93. | வேத நன் | 81 |
| 94. | வேரிகைப் பரசர் | 23 |
| 95. | ஜெயது ஜெயது | 5 |

# அருஞ்சொற்பொருளகராதி
## (எண் பாட்டு எண்)

| | | | |
|---|---|---|---|
| அகி | - | நாகம் | 7 |
| அசலம் | - | மலை | 9 |
| அஞ்சனம் | - | கண்மை | 39 |
| அஞ்சலனுகூலர் | - | பயம் நீக்கி உதவுபவர் | 95 |
| அட்டகசம் | - | எட்டுயானைகள் அஷ்டகஜம் ஐராவதம் புண்டரீகம், வாமனம் குமுதம், அஞ்சனம் புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீகம் | 51 |
| அண்டர் | - | தேவர்கள் | 2 |
| அணங்கு | - | தெய்வம், மனைவி | 83 |
| அந்தகாரம் | - | பேரிருள் | 51 |
| அபரஞ்சி | - | 1008 மாற்றுள்ள புடமிட்டபொன் | 19 |
| அம்புலி | - | சந்திரன் | 28 |
| அம்போருகன் | - | பிரமன் | 7 |
| அமட்டுறாள் | - | வீறாப்புச் செய்கிறாள் (இழிவழக்கு) | 64 |
| அமலன் | - | மலமற்றவன், மலங்கள் ஆணவம், கன்மம், மாயை | 28 |
| அயன் | - | பிரமன் | 2 |
| அரம்பை | - | ரம்பை, தேவருலக ஆடலழகி | 19 |
| அரவிந்தம் | - | தாமரை | 79 |
| அரவு | - | பாம்பு | 35 |
| அருணம் | - | சூரியன் | 11 |
| அருமறை | - | அரிதாகிய வேதங்கள் | 1 |
| அலங்கல் | - | மலை | 34 |
| அளி | - | வண்டு | 79 |

| | | | |
|---|---|---|---|
| அன்னதரு | - | கற்பகத்தரு | 17 |
| அனம் | - | அன்னம் | 17, 32 |

## ஆ

| | | | |
|---|---|---|---|
| ஆயிரக்கண்ணன் | - | இந்திரன் | 49 |
| ஆர்க்கும் | - | யாருக்கும், எல்லோர்க்கும் | 31 |
| ஆரணம் | - | வேதம் | 42 |
| ஆரணன் | - | வேத வடிவமானவன் சிவன் | 11 |
| ஆனனம் | - | முகம் | 11 |

## இ

| | | | |
|---|---|---|---|
| இக்கு | - | கரும்பு | 25 |
| இங்கிலுள்ள | - | இங்குள்ள (இழி வழக்கு) | 47 |
| இந்து | - | சந்திரன் | 9 |
| இப்ப | - | இப்பொழுது (இழிவழக்கு) | 21 |
| இபம் | - | யானை | 11 |
| இமயச் செல்வி | - | தாட்சாயிணி, உமையம்மை | 1 |
| இரதம் | - | தேர் | 29 |
| இரசதக்கிரி | - | திருச்செங்கோடு | 20 |
| இழை | - | நூல் இழை | 37 |
| இழை | - | அணி | 27 |

## ஈ

| | | | |
|---|---|---|---|
| ஈய்ந்தேன் | - | ஈந்தேன் கொடுத்தேன் (இழி வழக்கு) | 89 |

## உ

| | | | |
|---|---|---|---|
| உகந்து | - | மகிழ்ந்து | 1 |
| உத்துங்கன் | - | காப்பாற்றுபவன் | 9 |
| உரகச்சயிலம் | - | நாகமலை | 46 |
| உருவிலி | - | உருவமற்றவன் - மன்மதன் | 35 |
| உன்னியது | - | நினைத்தது | 60 |

எ

| | | | |
|---|---|---|---|
| எண்திசைப்பாலர் | - | எட்டுதிசைப் பாலர்கள் இந்திரன், அக்கினி இமயன், நிருதி, வருணன் வாயு, குபேரன், ஈசானனன் | 51 |
| எவ்வனம் | - | அழகு | 28 |

ஏ

| | | | |
|---|---|---|---|
| ஏர் | - | அழகு | 4 |
| எழுகடல் | - | நன்னீர், உப்பு, பால், தயிர் தேன், நெய், கரும்பஞ்சாறு, கடல்கள் | 51 |

ஒ

| | | | |
|---|---|---|---|
| ஒற்றை மறுப்பினன் | - | விநாயகன் | 7 |

ஓ

| | | | |
|---|---|---|---|
| ஓதிமம் | - | அன்னம் | 19 |

க

| | | | |
|---|---|---|---|
| கஞ்சம் | - | தாமரை | 38 |
| கஞ்சுகிபூடணன் | - | நாகப்பாம்பு அணிந்தவன் சிவன் | 6 |
| கதம்பம் | - | கடம்பம் - மதுரை | 65 |
| கதிக்க | - | கதிபெற | 15 |
| கதித்தல் | - | சொல்லுதல் | 17 |
| கந்தம் | - | சந்தனம் | 64 |
| கயிலையம் கிரி | - | கைலாயமாகிய அழகிய மலை | 3 |

| | | | |
|---|---|---|---|
| கமைபெற | - | பொருத்தம் பெற | 43 |
| கர்த்தன் | - | தலைவன் | 28 |
| கரங்க | - | பேரொலி செய்ய | 32 |
| கரிஅதள் | - | யானைத்தோல் | 5 |
| கலவித் தொழில் | - | காமப்புணர்ச்சி | 91 |
| கவிகை | - | குடை | 26 |
| கவின் | - | அழகு | 26 |
| கள் | - | தேன் | 24 |
| கா | - | சோலை | 24 |
| கால் | - | காற்று | 51 |
| காவி | - | நீலோர்ப்பலம் | 4 |
| குடிலம் | - | வஞ்சகம் | 27 |
| குலிகம் | - | வச்ராயுதம் | 47 |
| குழவி | - | குழந்தை | 2 |
| கெம்புதல் | - | உரத்து பேசுதல் | 85 |
| கொடிமாடச் செங்குன்றூர் | - | திருச்செங்கோடு | 2 |
| கோகனகம் | - | தாமரை | 6 |
| கோடீரம் | - | முடி | 11 |
| கோதைப்பரமர் | - | அர்த்தநாரீசர் | 8 |

ச

| | | | |
|---|---|---|---|
| சகி | - | தோழி | 86 |
| சகோப சாகை | - | உடன் வசிக்கும் இடம் | 63 |
| சங்கரா | - | இன்பம் செய்பவர் | 5, 45 |
| சத்யலோகம் | - | மேலுலகம் ஏழனுள் ஒன்று | 51 |
| சதிக்கும் | - | அழிக்கும் | 22 |
| சதுமுகன் | - | பிரமன் | 28 |
| சம்பிரமம் | - | மனக்களிப்பு | 19 |
| சயிலம் | - | மலை | 3 |

| | | | |
|---|---|---|---|
| சயிலவெஞ்சிலை | - | மகா மேரு மலையாகிய வில். திரிபுரம் எரித்த காலத்தில் சிவனுக்கு மகா மேருமலை வில்லாகப் பயன்பட்டது | 3 |
| சருவி | - | இகழ்ந்து | 11 |
| சரோருகம் | - | தாமரை | 19 |
| சவுரிக்குப்பி | - | பிரடை | 94 |
| சனலோகம் | - | மேலுலகங்களுள் பிதுரர் உலகம் | 5 |
| சாத வேதரூபம் | - | அக்கியின் வடிவம் வெப்பம் | 30 |
| சாதிக்கும் வேளை | - | மலர் அம்புஎய்யும் நேரம் (வசந்தகாலம்) | 22 |
| சாம்பிராக்கியம் | - | சாம்ராஜ்யம் அரசு (இழி வழக்கு) | 74 |
| சாயுச்யம் | - | மறுமைப்பேற்றில் உயர்ந்தது | 49, 95 |
| சாரூபம் | - | சிவரூபம் பெறல். மறுமைப் பேறுகளில் ஒன்று | 45 |
| சித்ரமாம் | - | விதவிதமான | 30 |
| சிந்துரமுகன் | - | விநாயகர் | 15 |
| சிலாக்கியம் | - | சிறப்பு (இழி வழக்கு) | 78 |
| சீதளம் | - | குளர்ச்சி | 56 |
| சீர்கொண்ட மணி | - | கவுத்துவமணி | 4 |
| சீறுறாய் | - | சீறுகிறாய் (இழி வழக்கு) | 33 |
| சுட்டி | - | தலையணி | 38 |
| சுருதி | - | வேதம் | 41, 83 |
| சுவலோகம் | - | சுவர்க்க லோகம் | 51 |
| சுழிக்கை | - | சுளுக்கி. வேட்டைக்குப் பயன்படும் ஓர் ஆயுதம் | 79 |
| செஞ்சடிலர் | - | செஞ்சடை உடையவர் சிவபெருமான் | 4 |
| சென்ம சாபல்லியம் | - | பிறப்பிலாப் பெருவரம் | 57 |
| செனத்து | - | சினத்து என்பதின் மரூஉ வழக்கு | 31 |

| | | | |
|---|---|---|---|
| சேய் | | முருகன் | 28 |
| சொன்னம் | - | சொர்ணம், பொன் | 49 |
| சோமன் | - | தந்திரன் | 31 |

## த

| | | | |
|---|---|---|---|
| தங்க மகமேரு | - | தங்கமாக இருக்கும் மகாமேரு மலை | 51 |
| தடம் | - | குளம் | 52 |
| தண்டமிழ் | - | தண்தமிழ். உளம் குளிர்விக்கும் தமிழ் | 2 |
| தத்தை | - | கிளி | 44 |
| தமனியம் | - | தங்கம் | 28 |
| தமிழ்த்தியாகன் | - | அர்த்த நாரிசர் | 10 |
| தருக்கள் நான்கு | - | பாரிஜாதம் கற்பகம், மந்தாரம் தேவதாரு | 51 |
| தார் | - | ஆண் அணியும் மாலை | 45 |
| தாரு | - | கற்பகம் | 45 |
| தானித்து | - | தியானித்து | 17 |
| திக்கயங்கள் | - | திசையானைகள் | 45 |
| திரிகை | - | எந்திரம் | 49 |
| திருபீடம் | - | நாட்டிய மாடும் இடம் | 17 |
| திருநாகம் | - | நாகமலை | 4 |
| திருவருள் | - | கருணை | 1 |
| துளபம் | - | துளசி | 4 |
| தூதிளம் கனி | - | தூவளைக் கொடிக்கனி | 94 |
| தெர்ப்பசயனம் | - | திருப்புல்லாணி | 5 |
| தென்றல்காளோ | - | தென்றலே | 29 |
| தோதகம் | - | ஜாலவித்தை | 94 |

## ந

| | | | |
|---|---|---|---|
| நலப்பணி | - | அழகிய பாம்பு | 37 |
| நவகண்டம் | - | ஒன்பது கண்டங்கள் மேல்பால் விதேகம் தென்பால்விதேகம், வடபால்விதேகம், மத்திமகண்டம் மேல் பால் ரேபதம், வடபால் ரேபதம், தென்பால்ரேபதம், வடபால் பரதம், தென்பால் பரதம் | 51 |
| நவநீதம் | - | வெண்ணெய் | 95 |
| நவம் | - | அழகு | 19 |
| நவமணி | - | கோமேதகம், நீலம், பவளம், முத்து, மரகதம், மாணிக்கம், புஷ்பராகம், வைடூர்யம், வைரம் | 67 |
| நாகச்சிகரி | - | நாகமலை | 1, 30 |
| நாகாசலர் | - | நாகமலையினர், சிவன் | 25 |
| நாரி கணபதி | - | வல்லபைகணபதி, | 1 |
| நாவலம் தீவு | - | ஜம்பூத்வீபம் - உலகம் | 51 |
| நித்ய கல்யாணர் | - | இடைவிடா மங்களம் உடையவர் | 4,5,6 |
| நித்யகீதர் | - | சுந்தரர் | 18 |
| நிமலி | - | உமையம்மை | 48 |
| நீருடம் | - | தெளிவு | 17 |
| நெட்டானவர் | - | நேர்மை உடையவர் | 22 |

## ப

| | | | |
|---|---|---|---|
| பங்கயன் | - | திருமால் | 5 |
| பஞ்சாட்சரன் | - | திரு ஐந்தெழுத்தாக இருப்பவன், சிவன் | 6 |

| | | | |
|---|---|---|---|
| பஞ்சமாபாதகங்கள் | - | கொலை, பொய், களவு, கள், ஊன் , குருநிந்தை | 49 |
| பஞ்சபாணன் | - | ஐந்து அம்பு எய்யும் மன்மதன் | 35 |
| பணிகிரி | - | நாகமலை | 18,28 |
| பணிவெற்பு | - | நாகமலை | 7 |
| பட்சபாரம் | - | நிதிக்குறைவு | 31 |
| பருப்பதம் | - | மலை | 32 |
| பதுமம் | - | தாமரை | 19 |
| பயிலு | - | பலகாலும் சொல் | 3 |
| பரசர் | - | கோடாரி என்னும் ஆயுதத்தை உடையவர் | 23 |
| பரமித்திரர் | - | பொதுவாம் தோழமை உடையவர் | 4 |
| பரமேட்டி | - | மேலான இடத்தில் இருப்பவர் | 6 |
| பாங்கி | - | தோழி | 20 |
| பாத சாலம் | - | பாத சதங்கை | 13 |
| பாயல் | - | படுக்கை | 32 |
| பாலலோசனம் | - | நெற்றிக்கண் | 13 |
| பிரசித்தம் | - | விளம்பரமானது | 45 |
| பிராணபதம் | - | உயிர்த்தரம் உடைய | 20 |
| பிரபை | - | சாயல் | 15 |
| பிரபை | - | கண்ணாடி | 8 |
| பிறமிஞ்ச | - | பிரமிக்க (இழி வழக்கு) | 39 |
| பிறிங்கு | - | ஒரு முனிவர் | 11 |
| புகலும் | - | சொல்லும் | 2 |
| புண்டரிகத்துஅயன் | - | தாமரையில் வீற்றிருக்கும் பிரமன் | 2 |
| புயல் செய்கண்டன் | - | நீலகண்டன் | 3 |
| புழுகு | - | புனுகு | 64 |

| | | | |
|---|---|---|---|
| புனிற்று இளம்பிரை | - | பத்து நாட்களுக்கு உட்பட்ட பிரை. மூன்றாம் நாள் பிறை | 52 |
| பூதரம் | - | மலை | 12 |
| பூருவம் | - | முற்பிறவி | 75 |
| பூலோகம் | - | மண்ணுலகம் | 51 |
| புலவோர் | - | புலமை மிக்கவர் | 2 |
| பூனைக் காலி | - | குறத்தியர் அணி | 43 |
| பெற்ற அன்னை இல்லம் | - | திருமகளின் இல்லமாகிய தாமரை | 35 |
| பொலன் | - | பொன் | 34 |
| பொன்முகரி | - | காளத்தி மலையைச் சார்ந்த நதி | 55 |

## ம

| | | | |
|---|---|---|---|
| மக்காவடம் | - | எருக்கு மணி மலை | 37 |
| மகாலோகம் | - | மேல் உலகம் ஏழினுள் ஒன்று | 51 |
| மகேசர் | - | சிவன் | 4 |
| மண்டலம் | - | வாதம் புரியும் இடம் | 2 |
| மட்டுத்தப்பி | - | மிதமின்றி | 94 |
| மதன் | - | மன்மதன் | 24 |
| மது | - | தேன் | 60 |
| மலயக்கால் | - | தென்றல் | 24,28,30 |
| மலய வெற்பு | - | பொதிகை மலை | 29 |
| மவ்வல் | - | மல்லிகை | 13 |
| மாய்கை | | மாயை | 51 |
| மால் | - | மயக்கம் | 26 |
| மறைப்பொருள் | - | வேதாந்தம் | 1 |
| மிதுனம் | - | ஒரு ராசி, ஆண், பெண் சேர்ந்தது | 73 |

| | | |
|---|---|---|
| முரசு | - திருநாள், படைநாள், மணநாட்களுக்கு அறையப்படும் முரசு | 41 |
| முனியசலம் | - பொதியமலை | 28 |
| முனிவன் மலையம் | - பொதியமலை | 44 |
| மூசிக வாகனன் | - மூஷிகவாகனன் - மூஞ்சூரை வாகனமாகக் கொண்டவன் விநாயகன் | 7 |
| மேக வாகனன் | - இந்திரன் | 14 |
| மோகர் | - மோகத்துக்கு உதவியவன் | 18 |
| மோடி | - மாயவித்தை | 21 |

## ர

| | | |
|---|---|---|
| ரஞ்சிதம் | - புத்தெழில் - விரும்பும் எழில் | 37 |

## ல

| | | |
|---|---|---|
| லாகிரி | - போதைப் பொருள் | 25, 82 |

## வ

| | | |
|---|---|---|
| வக்காமணி | - சிப்பிமணி | 37 |
| வச்சிரபாணி | - தேவேந்திரன் | 13 |
| வசனிப்பையே | - உரைநடையில் சொல் | 46 |
| வடவாமுகாக்கினி | - குதிரையின் முகவடிவில் உள்ள ஊழித்தீ | 94 |
| வதனி | - அழகுமுகம் உள்ளவள் | 39 |
| வருமம் | - காழ்ப்பு | 27 |
| வாகா | - வாகானவனே பொருத்தமுடையவனே | 10 |
| வாணி | - கலைமகள் | 2 |
| வாரணம் | - யானை | 42 |
| வாரி | - கடல் | 32 |

| | | | |
|---|---|---|---|
| வாலிபக் குயில் | - | இளங்குயில் | 37 |
| வித்தியாதரர் | - | தேவர்கள் | 12 |
| விதுமுகம் | - | மதிபோன்ற முகம் | 20 |
| விண்டு | - | விரிவு சொல்லி | 25 |
| விம்பம் | - | பிம்பம் | 19 |
| விபுதர் | - | அறிஞர் | 5 |
| விருத்தம் | - | வீண் | 25 |
| வியாழம் | - | குரு | 71 |
| விரகம் | - | காதலன் பிரிவுத்துயர் | 30, 35, 90 |
| விருது | - | பெருமை | 21 |
| விலங்கல் | - | மலை | 34 |
| வெங்கக்கல் | - | வெள்ளைக்கல் (இழி வழக்கு) | 94 |
| வெள்ள நீச்சு | - | வெள்ளத்தில் நீந்துதல் | 22 |
| வெற்பு இருநான்கு | - | எட்டு மலைகள் - இமயம் மந்தரம், கையிலாயம், விந்தயம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் | 51 |
| வேகைடையம் | - | நாகத் தகடு | 13 |
| வேரி | - | தேன் | 23 |

## இந்நூலைப் பற்றி . . .

உமையொருபாகனாகத் திருச்செங்கோட்டில் எழுந்தருளி யிருக்கும் பெருமானின் அருள் நலத்தை எளிய நடையில் சிறப்பித்துரைக்கும் இலக்கியம் அர்த்தநாரீசர் குறவஞ்சி ஆகும். இக் குறவஞ்சி நூல் இதுவரை அச்சில் இல்லாமல் ஏட்டுச் சுவடிகளில் உறங்கிக் கிடந்த ஓர் அருமையான குறவஞ்சி நூலாகும்.

இந்நூலை ஒரு பெண்பாற் புலவர் இயற்றி உள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஔவையார், காரைக்கால் அம்மையாருக்கு அடுத்ததாகப் பிரபந்த இலக்கியம் படைத்த ஒரே பெண்பாற் புலவர் பூங்கோதையே ஆவார். கணவனும், மனைவியும் கவிஞர்கள் என்ற பெருமை பூங்கோதை-பத்தர்பாடி தம்பதிகளுக்கு உண்டு.

இந்நூலில் அர்த்தநாரீசரைக் காதலிக்கும் பெண்ணான மோகனாங்கியாகக் கவிஞர், தன்னையே வரித்துக் கொண்டு பாடியுள்ளார். அதனால் அர்த்தநாரீசரின் பால் கவிஞர் கொண்ட காதல் புலப்படுகிறது.

ஆண்டாள் நாச்சியாரைப் போன்று, பக்திப்பெருக்கத்தால் வந்த தெய்விகக் காதல், அர்த்தநாரீசர் மீது மட்டும் இன்றிச் சோலை மலை அழகரின் மீதும் ஆழப்பதிந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழிலுள்ள மற்ற குறவஞ்சி நூல்களைக் காட்டிலும் அகப்பொருள் சுவை செறிந்த இசைப்பாடல்கள் இவ்விலக்கியத்தில் அதிகம்உள்ளன. தலைவனின் மாலை பெறுதல் போன்ற நிகழ்வுகள் இலக்கிய இன்பத்தை அதிகப்படுத்தும் தனிச் சிறப்புகள் ஆகும்.

**ஞா. மேகலா**
பதிப்பாசிரியர், நூலகப் புலவர்
டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம்
சென்னை - 90.